Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/720)


முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஆனி 05 | ஞாயிற்றுக்கிழமை | (19.06.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 263



சிறந்த ஆசிரியர்களுக்கு கௌரவம் 09



திராவிட இனம் என்பதே இல்லை 12



வவுனியாவில் விசித்திர தக்காளிப்பழம் 11



வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம் 02

# சனல் – 4 போர்க்குற்ற ஆதாரங்கள் வழக்குத் தொடுக்க தயாராகிறது அரசு



(கொழும்பு)

யுத்தக் குற்றத்துக்கான சான்றுகளை காணொளிக் காட்சிகளாக வெளியிட்ட சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கையில் இறங்கவுள்ளது.

சனல் - 4 தொலைக்காட்சி சேவைக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சனல் - 4 காணொளிகள் மூலமாக இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கப்பட்டிருப்பதாகக் கூறியே அந்நிறுவனத்துக்கெதிராக இலங்கை அரசாங்கம் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற வைபவமொன்றின் பின்பு நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான (15 ஆம் பக்கம் பார்க்க)

## தீயில் கருகி இளம் பெண் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பொன்னகர்ப் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் தீக் குளித்து மரணமடைந்ததாக கிளிநொச்சிப் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி - பொன்னகர்ப் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான 22 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அவர்களது உறவினர்களின் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக (15 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி இளைஞன் யாழ்ப்பாணத்தில் மாயம்

### சல்லடை போடும் பொலிஸார்

(ஊர்காவற்துறை)

யாழ். நெல்லியடிப் பகுதியில் பணத்துடன் வங்கிக்குச் சென்ற தென்பகுதி இளைஞன் ஒருவர் கடந்த 16 ஆம் திகதி காணாமற்போனதாக வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் வதிரி றோட், உடுப்பிட்டியில் அமைந்துள்ள யாழ் பீச் ஹோட்டலில் பணிபுரிந்துவந்த இரத்தினபுரி, றக்குவான பிரதேசத்தைச் சேர்ந்த பாகிருஸ்ணன் ரமேஸ் (வயது 28) என்ற இளைஞனே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

கடந்த 16 ஆம் திகதி யாழ் பீச் ஹோட்டலில் இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 110 ரூபா பணத்துடன் காலை 10 மணிக்கு நெல்லியடி சம்பத் வங்கிக் கிளைக்கு பணவைப்புச் செய்வதற்காக சென்றபோதே இவர் காணாமல் போயுள்ளதாக முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டி வன்செயல் சூத்திரதாரிகள் யார்?

### மனம் வருந்துகிறார் யாழ். தளபதி

(கொழும்பு)

ஏதோ ஒரு பிரிவினர் யாழ்ப்பாணத்தில் இயங்குவதாகவும் இவர்களாலேயே அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கலாம் என தான் சந்தேகிப்பதாகவும் பாதுகாப்புப் படைகளின் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸாரும் இராணுவப் பொலிஸாரும் இச்சம்பவம் தொடரபாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் முடிவில்தான் அவர்கள் யார் என்பது தெரியவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை மாலை யாழ். இராணுவ சிவில் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அளவெட்டியில் கடந்த வியாழனன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தின்போது தாக்குதல் (15 ஆம் பக்கம் பார்க்க)



## அல்லைப்பிட்டியில் நடமாடும் சேவை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு

(ஊர்காவற்துறை)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அல்லைப்பிட்டி பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தரத் தீர்விற்குமான செயற்திட்டத்தினால் அல்லைப்பிட்டி பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்று நாளை காலை 10 மணிக்கு அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், வேலணை பிரதேச செயலகம், தீவக வலயக் கல்விப் பணிமனை, ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, ஊர்காவற்துறை பொலிஸ் நிலையம், பால்நிலை வன்முறைக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த விமானங்களை செயற்படு நிலையில் தொடர்ந்தும் வைத்திருக்க அரசு ஆவல்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் யுத்த விமானங்களை எந்தநேரத்திலும் செயற்பாட்டு நிலையில் வைத்திருக்க விமானப்படைத் தலைமையகம் விரும்புகிறது.

மேற்படி நோக்கத்தை அடைவதற்காகவே ஐக்கிய நாடுகள் சமாதானப் படைக்கு தமது யுத்த விமானங்களை வழங்க இலங்கை அரசு முன்வந்ததாக இராணுவ விமர்சகர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, ஐ.நா. (15 ஆம் பக்கம் பார்க்க)



## கிளிநொச்சியில் வெடித்தது கண்ணிவெடி

### ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் கண்ணிவெடியொன்றில் சிக்கி ஒருவர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சாந்தபுரத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியொன்றை அகற்றமுற்பட்டபோதே பிரஸ்தாப நபர் கண்ணியில் சிக்கி காயமடைந்துள்ளார். கிளிநொச்சிப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிறுவனத்தின் பணியாளர் ஒருவரே இவ்வாறு படுகாயம் அடைந்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத்தினரும் புலிகளும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் நாட்டு சிறுவன் இலங்கைக்கு நிதியுதவி

(கொழும்பு)


இலங்கைக்கு பலவிதத்தில் நிதியுதவி செய்தவர்களில் சுவீடனைச் சேர்ந்த 12 வயது சிறுவன் ஒருவரும் உள்ளடங்கிய விடயம் வெளியாகியுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் சுவீடன் நாட்டில் சமுத்ரா ஒல்சன் (15 ஆம் பக்கம் பார்க்க)



# மனைப் பொருளாதார செயற்திட்டம் வாழ்வாதாரத்தை உயர்த்தும்

## அமைச்சர் டக்ளஸ் பேச்சு



(யாழ்ப்பாணம்)

மனைப் பொருளாதார வேலைத்திட்டத்தினூடாக மட்டுமன்றி ஏனைய உதவித் திட்டங்களினூடாகவும் வறுமைக்கோட்டுக்குள் வாழும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். இதற்கு எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களில் எமது கரத்தினைப் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மனைப் பொருளாதார வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அறிமுக நிகழ்வு நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சந்தர்ப்பங்களை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் எம்மவர்கள் விட்ட தவறுகள் காரணமாகவே இன்றும் எமது மாவட்டத்தில் வறுமைநிலை நீடிக்கின்றது. தற்போது அச்சமற்ற ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் பல கைத்தொழில் வேலைத்திட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தில் இளைஞர், யுவதிகள் தேவைப்படுவார்கள் இதன் மூலம தொழில் வாய்ப்புக்களையும உருவாக்கிக்கொள்ள முடியும் என்றார்.

மேற்படி நிகழ்வில் மனைப் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பான கையேடுகள் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலெஸ்ரின் (உதயன்) ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர், வடமாகாண சமுர்த்தி இணைப்பாளர் திணைக்களத் தலைவர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், கிராம அலுவலர்கள், மனைப்பொருளாதார வேலைத்திட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட அறுநூறுக்கும் மேற்பட்ட பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களின் போஷாக்கு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தென்பகுதியில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் யாழ்.மாவட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரின் முயற்சியின் பயனாகத் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (26)

## சுருக்கிட்டு மரணம்

(கொழும்பு)

கொட்டாவ பொலிஸ் நிலைய சிறையில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் சிறைக்குள்ளேயே தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். நேற்று முன்தினம் சந்தேகநபர் தூக்கிட்டுக் கொண்டதாகவும் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதும் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒளிதர மறுக்கும் வீதி விளக்குகள்

காரைநகர்ப் பிரதான வீதியில் உள்ள மின்விளக்குகள் இரவில் ஒளிர்வதில்லை இதனால் சில இடங்கள் இருளில் மூழ்கிக கிடக்கின்றன. அண்மையில் காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் இருபதுக்கு மேற்பட்ட மின்குமிழ்கள் காரைநகர் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டு அவை பொருத்தப்பட்ட சில இடங்களில் மாத்திரம் இரவில் வெளிச்சம் இருப்பதாகவும் ஏனைய இடங்களுக்கும் மின்குமிழ்களைப் பொருத்த வேண்டுமெனவும் இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

# வலி.மேற்கில் கட்டுமானப்பயிற்சி ஆர்வம் உள்ளவர்களுக்கு சிறந்த திட்டம்

## பிரதேச செயலகம் ஏற்பாடு

(ஊர்காவற்துறை)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் இளைஞர் யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக் கூடியவாறான கட்டுமானப் பயிற்சிகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு இளைஞர் யுவதிகளின் எதிர்காலத் தொழில் வளங்களை விருத்திசெய்யும் நோக்கோடு கட்டடத் தொழிலாளி (மேசன்) தொழிற்பயிற்சித் திட்டம் ஒன்றினை வட்டுக்கோட்டை துணைவிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றதாக வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு தெரிவித்தார்.

மேற்படி பயிற்சிநெறி இருமாதங்களைக்கொண்ட பயிற்சி நெறியாக விளங்குவதுடன் முதல் ஒரு மாதம் வகுப்பறைப் பயிற்சியாகவும், இரண்டாவது மாதம் வெளிக்களப் பயிற்சியாகவும் கட்டட நிரமாணத்துக்குட்பட்ட வரன்முறையான பயிற்சியாக வழங்கப்படவுள்ளது

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்களுக்கு நாளாந்தம் ரூபா 400 பயிற்சிக் காலக்கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதோடு பயிற்சி நிறைவில் கட்டுமானப் பணிகக்கான மேசன் தொழிலுக்கான சகல உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறியில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை இணைந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (27)

## தோப்புக்காடு வீதிக்கு எப்போது புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தோப்புக்காடு வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

1991 இடப்பெயர்வுக்குப் பின்னர் பாவனையற்றுக் கிடந்த இவ்வீதி கடந்த இரண்டு வருடங்களாக மக்கள் மீளக்குடியமரத் தொடங்கிய பின்னர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருபது வருடங்களுக்கு மேல மூடப்பட்டிருந்த தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயமும் இவ்வாண்டு தொடக்கத்தில் மீளத்திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வணிகமன்றத்தின் வெளியீடான "வணிகமேதை சஞ்சிகை" நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிப் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

வணிகமன்றத் தலைவர் மு.மிதுலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் க.தே ராஜா கலந்துகொள்வார். (44)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையால் நடாத்தப்படும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராகத் தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு, கிழக்கு வலயமுகாமையாளர் வி.அருளானந்தம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ்.சின்மயாமிசன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரம் சைத்தன்யா சுவாமி ஆகியோர் கலந்துகொள்வர். (44)



அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் 2010 இற்கான கலை இலக்கிய விருது வழங்கல் நிகழ்வும் கலை இலக்கிய பெருவிழா நிகழ்வும் துன்னாலை வடிவேலர் மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 2010 இற்கான இலக்கிய அதியுயர் விருதினை பண்டிதர் பொன்.சுகந்தனிடமிருந்து யாழ். திருமறைக்கலாமன்றத்தின் மூத்த உறுப்பினர் ஜீ.பி.பேர்மினாஸ் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.


**தபால் மூலம்** ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six month JUNE 2011 TO NOVEMBER 2011

20 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| ☐ கல்முனை | ☐ புத்தளம் | ☐ யாழ்ப்பாணம் | ☐ ஹட்டன் |
| ☐ மட்டக்களப்பு | ☐ வவுனியா | ☐ கண்டி | ☐ அனுராதபுரம் |
| ☐ திருகோணமலை | ☐ மன்னார் | ☐ கொழும்பு | ☐ நுவரெலியா |

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றைக் கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு sms செய்து பெற்றுக்கொள்ளலாம். mobile! 0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி ➤ Country Co - ordinator MARUTHUR A.HASSEN (B.Sc psychology, M.Sc psychology,

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07

web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத்திகதி: 28.06.2011

(C/783)

திடமான நம்பிக்கை நிலவிய சமுதாயத்தில் பயனுள்ள செயல்கள் நிறைந்திருந்தன. ஆனால், நம்பிக்கை இல்லாத சமுதாயத்தில் நிரந்தர நன்மைகளான செயல்களே நிகழவில்லை. அவை வெளியில் எவ்வளவு பகட்டாயிருப்பினும் பயன் எதுவும் இல்லை.

-ஸைவுதீ-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மண்ணைக் காக்கும் மைந்தர்!

ஆன்மீகப் பேச்சாளர் சுகிசிவம் யாழ்ப்பாணம் வந்து ஓரிரு நாட்கள் மட்டுமே பார்த்துவிட்டு திரும்பவும் தமிழகம் சென்று பேசிய பேச்சு யூ-டியூப்பில் கேட்கக் கிடைக்கிறது. யாழ்ப்பாணத்தில் மேலோட்டமான பார்வையிலேயே சட்டென்று அவருக்குத் தென்பட்ட ஒரு விநோதத்தை தனது பேச்சின் இடையில் அவர் குறிப்பிடுகிறார். கீழ்வருவது அந்த ஆன்மீகப் பேச்சாளரின் வார்த்தைகள்:

"அங்கு கண்ட ஒரு வேதனையான செய்தியினைச் சொல்கிறேன். மண்மீட்புப் பற்றி வெளிநாடுகளில் இருப்பவர்கள் வீர வசனங்கள் பேசுகிறார்கள். ஆனால், வெளிநாடுகளில் செட்டிலாகி அங்கு வசதியான வீடுகளில் தற்போது வாழ்ந்து வருகிறவர்கள், யாழ்ப்பாணத்தில் குண்டுகள் துளைத்துப் பற்றைகள் வளர்ந்து பாழடைந்து கிடக்கும் தங்களுக்குச் சொந்தமான பழைய வீடுகளை அங்கே தங்க வீடின்றி அலையும் தமிழர்களுக்குக் கொடுக்கத் தயாரில்லை. இந்த வீடுகளை விட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு ஓடிப் போனவர்கள், அங்கேயே வசதி வாய்ப்புகளோடு திரும்பும் எண்ணமின்றித் தங்கிவிட்டவர்கள், போரினால் நொந்து வீடின்றி வசதிகளின்றி அல்லலுறும் சகதமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஏராளமாக யாருமின்றித் தனித்துக் கிடக்கும் அந்த வீடுகளைக் கொடுக்கக் கூடாதா? தாங்கள் திரும்பிப் போய் வாழ உத்தேசமில்லாத வீடுகளை சேவை நிறுவனங்களுக்குக் கொடுத்து அங்குள்ள தமிழர்களுக்குக் கிடைக்கச் செய்யக் கூடாதா? தமிழர் துயரம், மண்ணுக்கான போராட்டம் என்றெல்லாம் பேசும் உலகத் தமிழர்களுக்கு அதற்கு மனம் வரவில்லை என்பதே உண்மை. ஒரு அரை அடி மண் தமிழன் தமிழனுக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இதுதான் இனப்பற்றா? போரினால் வாழ்விழந்து வாடும் அங்குள்ள தமிழ்மக்களுக்கு உலகத் தமிழர்கள் கொடுத்து உதவ வேண்டிய காலம் இதுதான்! அதைச் செய்யாமல் வெறுமனே வீர அரசியல் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை."

இப்படிப் பேசியிருக்கிறார் அந்த ஆன்மீகப் பேச்சாளர். யாழ்ப்பாண நிலைமையைப் பார்த்து அவர் சொல்கிறார். வன்னியின் நிலைமையோ இன்னும் மோசம். 70களில் படித்த வாலிபர் திட்டம் மற்றும் அரச காணிப் பங்கீட்டுத் திட்டங்கள் மூலம் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பெற்றுக் கொண்டவையே அங்குள்ள பெரும்பாலான காணிகள். அந்தக் காணிகளில் வேறு மக்களை கூலிக்குக் குடியமர்த்தி 'போஸ்ட் கார்ட்' விவசாயம் செய்து கொண்டிருந்த அந்த இளைஞர்கள் போர் ஆரம்பித்தவுடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

அவற்றில் கடந்த முப்பதாண்டுகளாகக் குடியிருந்த மக்களுக்கு அந்த நிலம் சட்டப்படி சொந்தமில்லை. கொடுமை என்னவென்றால், போர் முடிந்த பிறகு வெளிநாடுகளிலிருந்து திரும்பி வரும் அந்த நிலச் சொந்தக்காரர்கள், இங்குள்ள தங்கள் நிலங்களை நல்ல விலைக்கு விற்றுவிட்டுத் திரும்பிச் செல்ல வருகிறார்களே தவிர, மீளக்குடியமர்ந்து அவதிகளோடு இருக்கும் அந்த மக்களுக்கு நிலங்களை விட்டுத்தரத் தயாரில்லை. இப்படித்தான் இருக்கிறது தாய்மண்ணின் மீதும் துயருறும் சொந்த மக்கள் மீதுமான உலகத்தமிழரின் பாசம்! திரும்பவும் புலம்பெயர்ந்த தங்கள் தேசங்களுக்குப் போய், எதிரியிடமிருந்து மக்களைக் காக்கும் 'மண்மீட்பு'க்கான நாடுகடந்த அரசாங்க வாக்களிப்பில் கலந்துகொண்டு உணர்ச்சி பொங்கப் பேசப் போகிறார்கள்!

அதுமட்டுமில்லை, அரச நிலங்களில் எல்லாம் சிங்களக் குடியேற்றம் நடக்கிறது என்று அங்கிருந்தே கதறப் போகிறார்கள். இவர்கள் இங்கே வந்து குடியேறவோ, அல்லது செறிவுமிகுந்த தமிழ்ப்பகுதிகளில் வசிப்பவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் செல்லவோ விரும்பாதபோது சிங்கள மக்களை அங்கு குடியேற்றுவதை எப்படித் தடுக்கப் போகிறார்கள்? அல்லது வன்னியில் இனவிகிதாசார அளவை எப்படி மாறவிடாமல் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள்?

யாராவது நமக்கு ஏதாவது செய்வார்கள் என்று எதிர்பார்த்தபடி, அதிசயங்களுக்காக காத்திருப்பதல்லாமல், நடைமுறைச் சாத்தியமான விஷயங்களை யோசிக்கவோ, யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பெறக்கூடியதை வளப்படுத்தி மேற்செல்லவோ எண்ணாத இவர்களை நம்பி ஏனையவர்களும் ஆவேசத்தைப் பொங்கவிட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

-ஆசிரியர்-

# பொலிஸார் நடத்தும் நடமாடும் சேவை மக்கள் பயன்பெறவே நடத்தப்படுகிறது

## காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



(தெல்லிப்பளை)

கடந்த 3 தசாப்த காலமாக மக்கள் தங்கள் தேவைகளுக்கான சேவைகளைப் பொலிஸாரிடமிருந்து பெறமுடியாத ஒரு நிலை இருந்து வந்தது. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் மக்களுக்குச் சேவை செய்வதற்காகப் பொலிஸார் முன்வந்துள்ளதன் விளைவே இந்த நடமாடும் சேவையாகும் என்று காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா கூறினார்.

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற தெல்லிப்பளை பொலிஸார் நடத்திய நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் கடந்த 30 வருட கால யுத்தத்தின்போது மரணித்த பொதுமக்கள் மற்றும் ஊழியர்களை நினைவுகூர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

நாட்டில் ஏற்படுகின்ற குற்றங்களைத் தடுப்பதும் அக்குற்றங்கள் ஏற்படாதவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை மேற்கொள்வதே பொலிஸாரின் முக்கிய கடமையாகவுள்ளது.

ஜனாபதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனையில் உதித்த பொதுமக்களுடன் பொலிஸார் மேற்கொள்ளும் நட்புறவினான இந்நடமாடும் சேவையில் மக்கள் பயனடைய வேண்டும் என்பதாகும்.

ஆரம்பகாலத்தில் பெரும்பாலான பொதுமக்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தயக்கம் காட்டி வந்தமையை நான் நன்கு அறிவேன்.

நட்பு பொலிஸாரிடமும் பொது மக்களிடமும் நிலவிய எத்தகைய பிரச்சினையாக இருந்தாலும் அவற்றைக் கலந்துரையாடி நலல தீர்வொன்றைப் பெற்றுக்கொளள முடியும்.

பொலிஸ் நிலையங்களில் மக்களால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளைப் பதிவதற்கும் மொழி பெரும் தடையாக இருந்து வருகிறது.

இதனைச் சீர்செய்வதற்காக தற்போது பொலிஸாருக்கு மொழிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மொழிப் பிரச்சினையால் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்படும். முன்பு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த சில நிர்வாக நடைமுறைகளைத் தற்போது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாரோவிட்ட தவறினால் பொலிஸ நிலையங்களுக்குச் செல்ல முடியாதவாறு தயக்கம் காட்டி வந்தீர்கள். ஆனால் இப்போது சூழ்நிலை மாறியுள்ளது.

பொதுமக்களை நாடி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பொலிஸார் சமபந்தப்பட்ட அரச அதிகாரிகளின் அனுசரணையுடன் உங்களை நாடி வருகிறார்கள்.

எனவே இந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்தி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், தற்போது சீராக நடைபெற்று வரும் சிவில் நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பளைப பிரதேச செயலர் எஸ்.முரளிதரனும் உரையாற்றினார்.

இதில் வைத்திய கலாநிதிகளான இலட்சுமணன், பிரபாகரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலைநாதன, பிரதேச செயலக ஊழியர்கள், தெல்லிப்பளை வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனபபலர் கலந்துகொண்டனர்.

# வவுனியா நகரசபை எதிர்கட்சித் தலைவர் தனது பதவியிலிருந்து விலகினார்

(வவுனியா)

வவுனியா நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் தன் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தினை நகரசபைச் செயலாளருக்கும், மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளருக்கும் அனுப்பியுள்ளார்.

வவுனியா நகரசபை ஆளும் தரப்பினரின் சீரற்ற நடவடிக்கையால் மக்களுக்குச் சேவையாற்ற முடியாதுள்ளது. சேவையாற்றவே தேர்தலில் போட்டியிட்டு சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். ஆனால் மக்களுக்குச் சேவையாற்ற முடியாமல் இருப்பதனால், நகர சபைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்களின் பல கேள்விக்கு என்னால பதிலளிக்க முடியாதுள்ளது.

இதனால் தொடர்ந்து சபை உறுப்பினராக இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்ற காரணத்தினால், பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளேன் என லிங்கநாதன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நகர சபைத் தேர்தலில் புளொட்டின் அரசியல் பிரிவின் சார்பாகப் போட்டியிட்டு உறுப்பினராகத் தெரிவானார். (39)

# மன்னாரில் எண்ணெய் அகழ்வுப்பணி; ஒத்துழைப்பு வழங்கவுள்ள ரஷ்ய நிறுவனம்

(கொழும்பு)

மன்னாரில் மேற்கொள்ளப்படும் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க உலகின் பாரிய எரிபொருள் நிலையமான ஹாஸ் பிறவுண் நிறுவனத்தலைவர் அலெக்சின்டில் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ரஷ்யா சென்பீற்றர்ஸ் பேங்கில் உள்ள பொருளாதார மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமது நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது எரிசக்தி தயாரிப்புகளுக்காக பயன்படும் எரிபொருள் மற்றும் மின்சக்தியிலும் பார்க்க மலிவான விலையான எரிபொருளாக பயனபடுத்துவது தொடர்பான சந்தர்ப்பம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இதனை கண்டறிவதற்கான விசேட குழுவினரை இலங்கைக்கு அனுப்புவதற்கும் அவர் உடன்பட்டுள்ளார்.

## கொடிவிற்பனை

(ஆனைக்கோட்டை)

சர்வதேச புகைத்தல் எதிர்பபு தினம் கடந்த மே 31 ஆம் திகதி முதல் ஜுன 16ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப் பட்டிருந்த போதும் இத்தினத்தை ஒட்டிய கொடி விற்பனைச் செயறபாடுகள் தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று கொடி விற்பனையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (104)

## கள் வைத்திருந்தவர் செலுத்தினார் தண்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - கல்லாறு பகுதியில் 25 போத்தல் கள்ளை வைத்திருந்த ஒருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபருக்கு 500 ரூபா தண்டப்பணம் அறவிட்டதுடன் எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார். (110)

## கும்பாபிஷேகம்

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு கதிர்காம முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்துவோா இன்று காலை 10 மணிமுதல் பி.ப. 3 மணிவரை சாத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## பிரேத அறையின்றி இயங்கிவரும் முழங்காவில் பிரதேச வைத்தியசாலை

(பூநகரி)

முழங்காவில் பிரதேச வைத்தியசாலைக்கு பிரேத அறை இல்லாத காரணத்தால், அங்கு உயிரிழக்கும் நோயாளர்களின் சடலங்களை வைப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் பெரும் அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படும் நோயாளர்கள் உயிரிழந்தால் அந்தச் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் வரை பிரேத அறை இல்லாமல் வைத்தியசாலை விடுதியின் ஒரு பக்கமாக துணியினால் மூடி வைக்கப்படுவதாக நோயாளர்களை பார்வையிடவரும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடுதியில் ஒரு பக்கம் உயிருடன் இருப்பவர்களுக்கான சிகிச்சை வழங்கப்பட்டுவரும் நிலையில், மறுபக்கம் உயிரற்ற சடலங்கள் இருப்பது பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக பல தரப்பினராலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டபோது, சம்பந்தப்பட்டவர்களால் இவ்வைத்தியசாலை பிரேத அறை கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பிரேத அறையை கட்டுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என பலதரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (112)

## ஒரு வருட தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையினூடாக (NAITA) இலங்கை போக்குவரத்து சபையினால் ஒரு வருடகால தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய சாலைகளில் ரிங்கர், வெல்டர், பெயின்ரர், ரயர் பொருத்துநர், எலெக்ரீசியன், டீசல் என்ஜின் மெக்கானிக் ஆகிய தொழிற்பயிற்சிகளுக்கே விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன், பயிற்சியைப் பெற விரும்புவோர் 17 முதல் 35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பயிற்சியை மேற்கொள்ள விரும்புவோர் தாங்கள் விரும்பும் பயிற்சி நெறியைக் குறிப்பிட்டு சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) பலாலி வீதி, கோண்டாவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## மாவிட்டபுரம் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வருடாந்த திருவிழா

(யாழ். நிருபர்)

யாழ். குடாநாட்டின் புகழ் பூத்த கத்தோலிக்க தேவாலயமான மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்று காலையில் இருந்து திருவிழாத் திருப்பலி யும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இறையாசீர்வாதமும் இடம்பெறவுள்ளன. (10)

# மாறிவரும் இன்றைய நவீன உலகிற்கேற்ப பல்கலை கல்வியிலும் மாற்றம்வேண்டும்!

## டிறிபேர்க் கல்லூரி அதிபர் கோரிக்கை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் கல்விச் சொத்தாகும். இது எமது தமிழ்த் தேசியச் சின்னம். தமிழ்த் தேசிய உணர்வுக்குப் பங்கம் விளையாத வண்ணம் பல்கலைக்கழகச் செயற்பாடுகளை துணைவேந்தர் முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன்.

தென்மராட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதற்பெண் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாமண்டபத்தில் நடைபெற்றபோது, வாழ்த்துரை வழங்குகையில் அதிபர் அருந்தவபாலன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதிபர் இ. கையிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருந்தவபாலன் தொடர்ந்து பேசுகையில், மாறி வரும் நவீன உலகத்திற்கேற்ப பல்கலைக்கழகக் கல்வியிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும். இளைய தலைமுறையினரை வேலை உலகுக்குத் தயார் செய்யக்கூடிய வகையில், பல்கலைக்கழகங்களில் கல்வி போதிக்கப்படவேண்டும். எமது பிரதேசத்தில் காணப்படக்கூடிய வளங்களைச் சிறப்பிக்கக் கூடிய கற்கை நெறிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.


சிலர் பிறந்த காரணத்தால் சில பிரதேசங்கள் பெருமை பெறுகின்றன. பேராசிரியர் வசந்தி பிறந்த காரணத்தால் இன்று தென்மராட்சி பெருமை பெறுகிறது. கிராமப் பள்ளிக்கூடத்தில் பயின்று ஆங்கிலப் புலமையுடன் இவர் பெற்ற உயர்ச்சி ஏனையவர்களுக்கும் முன்மாதிரியாகும் என்றார். (10)


## லண்டன் பயணம்

(யாழ். நிருபர்)

லண்டன் காரை. நலன் புரிச் சபையின் அழைப்பை ஏற்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனும் பாரியாரும் லண்டனுக்குப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். எதிர்வரும் 25ஆம் திகதி லண்டனில் நடைபெறவிருக்கும் லண்டன் காரைநகர் நலன்புரிச் சங்கத்தின் "காரைச் சங்கமம்" நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்கின்றனர். (10)

## போக்குவரத்து வசதி இன்மை; இறால் பிடிப்பாளர்கள் அவதி





(கிளிநொச்சி)

ஆனையிறவு கடனீரேரி, சுண்டிக் குளத்துக்கு அண்மையான கடற்பரப்பில் இறால்பிடி நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிலில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் கடை போன்றவற்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இன்மையால் இவர்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கும் தொழில் செய்யும் பகுதிக்குமிடையில் அதிக தொலைவு இருப்பதும், அங்கே வேறு வசதிகள் எதுவும் இல்லாதிருப்பதுமே சிரமத்துக்குக் காரணம் என்று இவர்கள் கூறுகின்றனர்.

## முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் முடிவடைந்த வவுனியா மாவட்ட காணிப் பிரச்சினை மாநாடு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் காணிப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றிய உயர்மட்ட மாநாடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதிலும் எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை.

பல பிரச்சினைகள் இங்கு முன்வைக்கப்பட்டன. குளங்களை அத்துமீறி பிடித்து நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை, சிவில் நிர்வாகம் இல்லாத காலத்தில் அரசாங்கக் காணிகளை பலர் அத்துமீறிப் பிடித்தமை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குடியிருப்பாளர் காணிகளை பெருமளவு சுவீகரித்து வீதி எல்லைக்கோடுகள் இட்டமை போன்ற பல பிரச்சினைகள் இங்கு முன்வைக்கப்பட்டன.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதென மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் 20 முதல் 30 வருடங்களாக குடியிருக்கும் பலருக்கு காணிக்கான உறுதிப்பத்திரங்கள் கிடைக்காமை தொடர்பாகவும் இந்த மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காணிக்கான உறுதிப்பத்திரங்கள் இல்லாமையால் வங்கியில் கடன் பெற்றுக்கொள்ள முடியாதிருத்தல், ஏனைய வாழ்வாதார உதவிகளை குடியிருப்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியா திருத்தல் ஆகியன இங்கு சுட்டிகாட்டப்பட்டன.

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரசாங்கத் தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி குமரன் இரட்ணம், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், நான்கு பிரதேச செயலாளர்கள், காணி அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அத்தியட்சகர், வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளர்கள், நகரசபை செயலாளர், நீர்ப்பாசனத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர், பொலிஸார் உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## வசதிகள் இல்லாத முன்பள்ளிகள்

(முரசுமோட்டை)

கிளிநொச்சியில் 164 முன்பள்ளிகள், தற்போது இயங்கி வருகின்ற நிலையில் இம்முன்பள்ளிகளுக்குப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, அக்கராயன், பூநகரி, முழங்காவில், பச்சிலைப்பள்ளி, கண்டாவளை உள்ளிட்ட பிரதேசங்களிலேயே இம்முன்பள்ளிகள் இயங்கிவருகின்றன.

இதில் மூவாயிரத்து 800 வரையான சிறார்கள் கல்வி பயின்று வரும் நிலையில், கூடுதலான முன்பள்ளிகள் தனியார் வீடுகளிலும் பொதுக்கட்டடங்களிலும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இம்முன்பள்ளிகளில் மகிழ்வான கற்றல் கற்பித்தல் வசதிகள், தளபாட வசதிகள் எதுவுமற்ற நிலையில் 70 வீதமான முன்பள்ளிகள் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், கல்வி பயில்கின்ற சிறார்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக முன்பள்ளி கல்விச் சமூகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)





பூநகரி பொதுச்சுகாதாரப் பிரிவினர் மற்றும் பூநகரி பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நகர்ப்புற சிரமதானப் பணியில் பூநகரி பொலிஸ் அலுவலகர்கள், பூநகரி வாடியடி முகாம் இராணுவ வீரர்கள், பிரதேச சபைப் பணியாளர்கள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொதுச் சுகாதாரப் பிரிவினர் ஆகியோர் ஈடுபடுவதைக் காணலாம். (112)

# பிரதேச அபிவிருத்தியைத் துரிதமாக மேற்கொள்ள சரியான அரசியல் தலைமையை தெரிவு செய்யுங்கள்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(யாழ். நிருபர்)

சரியான அரசியல் தலைமையைத் தெரிவு செய்வதன் மூலமே எமது பிரதேசத்தின் அபிவிருத்தியைச் சிறந்த முறையில் முன்னெடுக்க முடியும்.

இவ்வாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய பாரம்பரிய மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சரும், யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெஸ்ரின் தலைமையில் நேற்று முன்தினம் காலையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசியல் பாதையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் சரியான திசையைத் தெரிவுசெய்து சரியான அரசியல் தலைமையின் கீழ் செயற்படுவோமானால் விரைவான அபிவிருத்தியைப் பெறமுடியும்.

நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். நடக்கப்போறவை நல்லவையாக இருக்கவேண்டும். கடந்த காலத்தில் எமது தமிழ் மக்கள் அனுபவித்த கசப்பான துன்பகரமான சம்பவங்களை ஒருபக்கத்தில் வைத்துவிட்டு, அழிந்துபோனவை போக எம்மிடம் இருப்பவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். இருப்பதைப் பாதுகாக்கும் வகையில் நாம் சகல விடயங்களிலும் முன்னேற வேண்டும்.

தவறான அரசியல் தலைமையின் செயற்பாட்டினால் கடந்த காலங்களில் மக்கள் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்க முடியாமலிருந்தது. சுதந்திரமாக நடமாட முடியாதிருந்தது. இனறு அந்த நிலை அடியோடு மாறி, மக்கள் சுதந்திரமாக கருத்துத் தெரிவிக்கக்கூடியதாக உள்ளது.


இத்தகைய சுமுகமான சூழலை உருவாக்கித் தந்த ஜனாதிபதி அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல் கட்சியால்தான் ஒரு பிரதேசத்தைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய முடியும். 1998 இல் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலின்போது எமது கட்சி பத்துப் பிரதேச சபைகளை வென்றெடுத்தது.

எதிர்காலத்திலும் அனைவரும் ஒன்றிணைந்து எமக்குச் சிறந்த அரசியல் பலத்தை வழங்குவதன் மூலம் இப்பிரதேசங்களை நல்லமுறையில் விரைவாக அபிவிருத்தி செய்ய முடியும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் திணைக்களத் தலைவர்கள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் வரவேற்புரை நிகழ்த்தினார். திணைக்களத் தலைவர்கள் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெருந்தொகையானோர் இக்கூட்டத்தில் கலநது கொண்டனர். (10)

# தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தால் மூதாளர் மாதாந்த கொடுப்பனவு அறிமுகம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனம் மூதாளர் மாதாந்தக் கொடுப்பனவை அறிமுகம் செய்துள்ளது.

விழிப்புலன் வலுவற்ற வாழ்வாதார உதவிகளின்றி தொழில் செய்ய முடியாத நிலையிலுள்ள மூத்தோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாக சங்கச் செயலாளர் கே.விஜயராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில்,

இந்த உதவித் திட்டம் பல தொழிலதிபர்களின் ஆதரவுடன் கடந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பார்வையற்ற இரு மகளிருக்கு சுயதொழிலுக்கான உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

பார்வையற்ற உறுப்பினர் ஒருவருக்கு மேற்படிப்பிற்காக ஒலிப்பதிவுக் கருவி, கேட்டல் சாதனம், உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிக்கு உதவிய தொழிலதிபர்களுக்கு சங்க உறுப்பினர்கள் பயனாளிகள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (கா)

# அதிபர் இன்றி இயங்கி வரும் பூநகரி மகா வித்தியாலயம்

(பூநகரி)

பூநகரி மகா வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபர் நியமிக்கப்படாமையால் பாடசாலை சமூகம் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அண்மையில் நடைபெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை தற்போது வீசி வரும் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் புழுதி பறக்கும் நிலையில், இப்பாடசாலை மாணவர்கள் மர நிழல்களின் கீழும், ஓலைக் கொட்டில்களுக்கு கீழும் புழுதிகளுக்கு மத்தியில் கல்வி கற்று வருவதாகவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என இக்கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் குறித்த பாடசாலைக்கு கட்டடம் அமைப்பதற்கான செயற்பாட்டை யுனிசெவ் நிறுவனம் பொறுப்பேற்றுள்ள நிலையில், இக் கட்டட வேலைகளை விரைவாகச் செய்து முடிக்க வேண்டும் எனக் கல்விப் பணிப்பாளரால் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (112)

# வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்தித்தர கோரிக்கை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - முரசுமோட்டைக் கிராமத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு இதுவரை முழுமையான வாழ்விட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கிராமத்தில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 743 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் 80 குடும்பங்களுக்கு மாத்திரமே நிரந்தர வீடு அமைப்பதற்கான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் தாம் நிரந்தர வீடுகள் இன்றி சிறு குடிசைகளில் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும், தமக்கு வீட்டுத்திட்ட வசதிகளைச் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்படுத்தித்தரவேண்டும் எனவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (110)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(19.06.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆனி 04 ஆம் நாள்.

இராகுகாலம 4.24–8.54, சுபநேரம் 8.54 –10.24

நட்சத்திரம் திருவோணம் பி.இ. 3.54 வரை

திதி: சதுர்த்தி பி.இ 1.34 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், தேக நலக்குறைவு, வைத்தியச் செலவு, நண்பர் தொல்லை.

ரிஷபம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், நண்பர் வருகை, மூத்தோர் ஆசி.

மிதுனம் :–குடும்பத்தில் நிம்மதி, பண வரவு, நண்பர் தொல்லை, தூரத்திலிருந்து நற்செய்தி, உடல்நலமின்மை.

கடகம்:– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், தேக நலம் பாதிப்பு, கடன்தொல்லை, சஞ்சலம்.

சிம்மம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் சஞ்சலம், கடன் பாதிப்பு, தேக நலக்குறைவு, சபலம்.

கன்னி :– குடும்பத்தில் குதூகலம், பண வரவு, காரிய சித்தி, மன மகிழ்ச்சி, விபத்து வரக்கூடும்.

துலாம் :– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், மூத்தோர் ஆசி, தூரத்திலிருந்து நற்செய்தி.

விருச்சிகம்:– தேக ஆரோக்கியம், குடும்பத்தில் குதூகலம், பண வரவு, ஆலய வழிபாடு, மன நிம்மதி.

தனுசு:– குடும்பத்தில் நிம்மதி, மன மகிழ்ச்சி, பண வரவு, தர்ம சிந்தனை, ஆன்மீக உணர்வு.

மகரம்:– பணம் வரும், தேக ஆரோக்கியம், மூத்தோர் ஆசி, தேகநலம் பாதிப்பு, மன மகிழ்ச்சி.

கும்பம் :– குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், தேக நலம் பாதிப்பு, கடன் பிரச்சினை, ஆலய தரிசனம்.

மீனம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனவிரோதம், உடல்நலக் குறைவு, காரியத்தடை.

# காரைநகரின் பல்வேறு வீதிகளுக்கு விரைவில் மின்சார விநியோகம்

(காரைநகர்)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் காரைநகர் பிரதேசத்திலுள்ள பல வீதிகளுக்கு மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் சித்தங்கேணி அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் குறித்த பிரதேசத்திலுள்ள ஊரி, கோட்டைப்புலம், வியாவில் உட்பட 12 கிராம வீதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியும் நிதியும் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில்,

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் குடாநாடு பூராகவும் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இதற்கான மூலப் பொருட்கள் இதுவரை வந்து சேராததால் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவை விரைவில் கிடைத்ததும் மின்சாரம் விநியோகிக்கப்படும். இதைவிட தவறவிடப்பட்ட மின்சார விநியோகம் தேவையான பிரதேசங்கள் இருந்தால் அவை தொடர்பான விபரங்களை பிரதேச செயலர் ஊடாகச் சமர்ப்பிக்கலாம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (86)

# மீள்குடியமர்ந்த 130 குடும்பங்களுக்கு கல்மடுவில் வீட்டுத்திட்டம் வழங்கல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி-கல்மடு நகர்ப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களில் 130 பயனாளிகளுக்கு 'சோஆ' நிறுவனத்தினால் வீட்டுத்திட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மேற்படி கிராம அலுவலர் பிரிவில் 2 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அக்கிராமங்களிலுள்ள பயனாளிகளுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதைவிட இப்பயனாளிகளுக்கு தற்காலிக மலசலகூடங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீளக்குடியமர்ந்த மக்களில் 97 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறன. (110)



யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலை மாணவர்கள் நேற்றுமுன்தினம் கல்விச் சுற்றுலாவினை மேற்கொண்டு யாழ்.பொது நூலகத்திற்குச் சென்று பார்வையிடுவதைக் காணலாம். (கா)

# வடமாகாண பாடசாலைக் கிரிக்கெட்; வவுனியா தமிழ் மத்திய ம.வி. வெற்றி







(நெல்லியடி)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 16, 17ஆம் திகதிகளில் ஆண்களுக்கு வவுனியா நகர சபை மைதானத்திலும், பெண்களுக்கு வவுனியா காமினி வித்தியாலய மைதானத்திலும் நடைபெற்றது.

இதில் அரையிறுதியாட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்திற்கும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வவுனியா கோமரசங்குளம் ம.வியை வென்று இறுதியாட்டத்திற்கும் தெரிவாகியது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவர்கள் நிறைவில், ஏழு விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு இவ் ஓட்ட எண்ணிக்கை பெரும சவாலாகவே அமைந்தது. இதனால் அவர்கள் இறுதிப் பந்து வரை போராடினர்.

இறுதி ஓவர்களில் 18 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பாடிய வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், முதல் பந்தில் ஒரு ஓட்டத்தை மட்டும் எடுத்தது. ஆனால், அவ் அணியின் துடுப்பாட்ட வீரர் டினோஜன் மிகச் சிறப்பாக இரு ஆறு ஓட்டங்களை எடுக்க ஆட்டம் பரபரப்பை எட்டியது.

இதனால், இறுதிப் பந்து வீச்சில் வெற்றிபெற 5 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது. இறுதிப் பந்தினையும் எதிர்கொண்ட டினோஜன், அப்பந்தை எல்லைக்கோட்டடிற்கு வெளியே அடிக்க அவ்வணி 6 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் 73 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரிக்க, 2ஆம் இடத்தை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை எதிர்த்து வவுனியா கோமரசங்குளம் மகாவித்தியாலயம் மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில், சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா கோமரசங்குளம் மகாவித்தியாலயம் எட்டு ஓவர்கள் நிறைவில், ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

பெண்கள் பிரிவில் முதலாமிடம் யாழ். விக்டோரியா கல்லூரியும், இரண்டாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், மூன்றாமிடத்தை முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டது.

இவர்களுக்கான கேடயங்களை வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் வழங்கிக் கௌரவித்தார். (12)

## விளையாட்டுச் செய்திகள்

## வருடாந்த விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்துள்ள "சில்ரண்ட வேல்ட்" முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ்விளையாட்டு விழாவில் கோப்பாய் பிரதேச செயலக ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (கா)

□ □ □

(வடமராட்சி)

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் வடக்கு மகாத்மா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மகாத்மா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவி ர. சுவர்ணமுகி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி. தில்லைநாதன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்துவ தொடர்பு அலுவலர் யோ. ஜொன் பீற்றர்ஸ் கௌரவ விருந்தினராகவும், ஈ.பி.டி.பி. கட்சியின். கொற்றாவத்தை பிரதேச அமைப்பாளர் க. பிரியந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (100)

## மேசைப்பந்தாட்டப் போட்டி யாழ். மாவட்டம் முதலிடம்

(நெல்லியடி)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டம் நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து நான்கு அணிகளும், வவுனியாவிலிருந்து ஒரு அணியும், மன்னார் மாவட்டத்திலிருந்து ஒரு அணியும் தேசியப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. இதில் 19 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ்ப்பாண மத்திய கல்லூரியும், இரண்டாமிடத்தை வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையும், மூன்றாமிடத்தை மன்னார் சென் ஆன் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் யாழ். மாவட்டமே பெற்றுக் கொண்டது. இதில் முதலாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், மூன்றாமிடத்தை சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (12)

## சாதனை முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடத்திய தடகள விளையாட்டுப் போட்டிகளில் 2002ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கோலூன்றிப் பாய்தல் சாதனையை இரு வீரர்கள் முறியடித்துள்ளனர். யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையேயான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இந்தச் சாதனை முறியடிக்கப்பட்டது. கடந்த 2002ஆம் ஆண்டு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரஞ்சித்குமாரினால் ஏற்படுத்தப்பட்ட 3.40 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து இந்தச் சாதனை பதியப்பட்டது. இதனைத் தற்போது பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.பாலகுமார் 3.55 மீற்றர் உயரம் பாய்ந்தும், தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.கணாதீபன் 3.65 மீற்றர் உயரம் பாய்ந்தும் இந்த சாதனையை முறியடித்துள்ளார்கள்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

கைதடி - நாற்வற்குழி குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டு விழா நேற்றுக் காலை 8.30 மணிக்கு கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 12 முன்பள்ளிகள் கலந்து கொண்டன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பாக்கியராஜா, ஈ.பி.டி.பி. கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (19)

## பண்டாரவளை சென் தோமஸ் கிரிக்கெட்; 22 ஓட்டங்களால் சென் ஜோன்ஸ் தோல்வி

(யாழ்ப்பாணம்)

பண்டரவளை சென் தோமஸ் அணிக்கெதிரான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பண்டரவளை சென் தோமஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இப்போட்டி நடைபெற்றது.

17 வயதுப் பிரிவின் பண்டரவளை சென் தோமஸ் அணியின் பிரிவு இரண்டிற்கும், யாழ். சென் ஜோன்ஸ் அணியின் பிரிவு மூன்று அணிக்குமிடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென் தோமஸ் அணி 44 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சனுஜ 79, இரங்க 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிருந்தவன் 30 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், அனோஜன் 21 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சென் ஜோன்ஸ் அணி 46.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களை எடுத்து தோல்வியைத் தழுவியது. இதில் அபினஜன் 78, விந்தகரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மனோஜ் நான்கு, டெர்வன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## 5 ஓவர் கிரிக்கெட் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மத்தி. விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கிடையே 6 பேர் பங்குபற்றும் 05 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முதல் நடைபெற்று வருகின்றது.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 40 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு: கொக்குவில் எபி அணியை எதிர் சுன்னாகம் ஐயனார் அணியும், சங்கானை ஞானவைரவர் அணியை எதிர் ஏழாலை கண்ணகி அணியும், சுன்னாகம் செவன் ஸ்ரார் அணியை எதிர் சுன்னாகம் நியூஸ்ரார் அணியும், திருநெல்வேலி முத்துத்தம்பி அணியை எதிர் சுன்னாகம் வள்ளுவர் அணியும், இரண்டாம் சுற்றில் உரும்பிராய் திருக்குமரன் அணியை அளவெட்டி ஞானவைரவர் அணியும் மோதவுள்ளன.

இத்தொடரில் மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பங்குகொள்கின்றன என்வும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கிரிக்கெட்டிலிருந்து விலகும்நேரம் கிறிஸ் கெய்லுக்கு வந்துவிட்டது

## டிரினிடாட் கார்டியன் தெரிவிப்பு

(டிரினிடாட்)

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட்டை விட்டு விலகும் முடிவை கிறிஸ்கெய்ல் எடுக்கும் நேரம் வந்துவிட்டதென மேற்கிந்திய தீவுகள் பத்திரிகை டிரினிடாட் கார்டியன் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்காக அசத்தியவர் கெய்ல். அணியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். விசாரணை நடப்பதற்கு முன்பாகவே அணியில் இருந்து ஒதுக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

இது மிகவும் மோசமான செயல். சமரசம் பேசுவதற்காக நடந்த கூட்டத்தில் மோதல் ஏற்பட்ட பின் கெய்லுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையிலான மோதல் அதிகரித்து விட்டது. இது அவருக்கு மிகவும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வேறு வழியின்றி மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட்டை விட்டு விலகும் முடிவை அவர் எடுக்கலாம் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெர்லின் மரதனோட்டப் போட்டியில் கெபர் செலாஸ்ஸி பங்கேற்பது உறுதி

மரதன் ஓட்டப் பந்தயத்தில் உலக சாதனை நிகழ்த்திய எத்தியோப்பியாவின் கெபர் செலாஸ்ஸி செப்டம்பரில் நடைபெறவுள்ள பெர்லின் மரதன் போட்டியில் பங்கேற்பார் என்று சர்வதேச தடகளச் சங்கம் அறிவித்துள்ளது.

26 மைல் தூரத்தைக் கடக்க வேண்டிய மரதன் ஓட்டப் பந்தயத்தில் 2006 முதல் 2009 வரையிலான 4 ஆண்டுகளில் தொடர்ந்து உலக சம்பியனாக தன்னை நிலைநிறுத்திக்கொண்ட அபார ஓட்டப்பந்தய வீரராக கெபர்செலாஸ்ஸி திகழ்கிறார். இவர் மரதன் தூரத்தை 2 மணி 03.59 நிமிடங்கள் ஓடி முடித்ததே இன்று வரை சாதனையாக உள்ளது. இச்சாதனையை இவர் பெர்லின்தான் நிகழ்த்தினார்.

பெர்லின் மரதனை மிகவும் நேசிக்கிறேன். இங்குள்ள மக்கள் மிகவும் நன்றாக ஊக்கப்படுத்துகிறார்கள். சாதனை நிகழ்த்துவதற்கு மிகவும் ஏற்றச் சூழல் இங்கு நிலவுகிறது. இது மிக வேகமான ஓட்டக்களமாகத் திகழ்கிறது என்று கெபர்செலாஸ்ஸி கூறியுள்ளார்.

லண்டனில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க எத்தியோப்பிய நாட்டிற்காக தகுதி பெற இந்த ஆண்டு பெர்லின் ஓட்டத்தை அவர் பயன்படுத்திக்கொள்கிறார். கடைசியாக டுபாயில் நடந்த மரதன் போட்டியில் பந்தய தூரத்தை 2 மணி 06.09 நிமிடங்களில் கடந்து வென்றவர். அதன் பிறகு பல போட்டிகளை காயம் காரணமாக பங்கேற்காமல் தவிர்த்தார்.

# நடுவரின் முடிவு மீள்பரிசீலனை முறை எதிரானவர் இல்லையாம் டெண்டுல்கர்



(மும்பை)

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறைக்கு நான் எதிரானவன் அல்ல. இந்த முறையை அமுல்படுத்தும் போது சினிக்கோ மீட்டர் (பந்து துடுப்பு மட்டையில் உரசியதா என்பதை துல்லியமாக கணிக்க கூடிய கருவி) ஹாட் ஸ்பொட் (பந்து எந்த இடத்தில் பட்டது என்பதை சரியாக காட்டும் கருவி) ஆகிய தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தினால்தான் இந்த முறை பயனுள்ளதாக அமையும் என்பதே எனது எண்ணமாகும். முழுமையாக இந்த முறையைப் பயன்படுத்தினால்தான் தொடர்ந்து நல்ல முடிவுகள் கிடைக்கும். இவ்வாறு நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

தற்போது நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்ய உதவுவதற்கு "ஹாக் ஐ" தொழில்நுட்பம் தான் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. அதனை விடுத்து நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது இந்திய கிரிக்கெட் சபையின் வேண்டுகோளாகும். இதற்கு அதிக செலவாகும் என்பதால் சர்வதேச கிரிக்கெட் சபை இதனை முழுமையாக பயன்படுத்தவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வூட் முதலிடம்

உலகில் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலை ஸ்போர்ட் இல்லஸ்ரேட்டட் வெளியிட்டு உள்ளது.

அதன்படி கோல்ப் வீரர்கள் டைகர் வூட்ஸ், மிக்கல்சன் முதல் 2 இடத்தில் உள்ளனர். ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் மூன்றாவது இடத்தில் உள்ளார். விளையாட்டு மற்றும் விளம்பரம் மூலம் அவர் ரூ.277 கோடி சம்பாதித்து உள்ளார்.

குத்துச்சண்டை வீரர் மேனி பாக்கியூன் நான்காவது இடத்திலும், கார் பந்தய வீரர் அலோசன்கா ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். பிரபல கால்பந்து வீரர் மெஸ்சி ஏழாவது இடத்திலும், ரொனால்டோ எட்டாவது இடத்திலும் உள்ளனர்.

# சிரேஷ்ட வீரர்களிடமிருந்து நிறைய கற்க வேண்டியுள்ளது

(கிங்ஸ்டன்)

இந்திய அணியின் மூத்த வீரர்களிடம் இருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன என்று இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் டங்கன் பிளெட்சர் தெரிவித்தார்.

இந்திய அணியின் இளம் வீரர்களின் ஆட்டம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மூத்த வீரர்களும் அணியில் இணையவுள்ளனர்.

அவர்களுக்கு நான் பயிற்சியளிக்கும்போதே அவர்களது அனுபவத்தில் இருந்து நிறைய விடயங்களை நான் கற்றுக் கொள்ள வேண்டும்.

5 ஆட்டங்களில் விளையாடுவதை மட்டும்வைத்து ஒரு வீரரின் திறமையை முழுமையாக மதிப்பிட்டு விட முடியாது. இந்திய அணியில் திறமை வாய்ந்த பல வீரர்கள் உள்ளனர். எனினும் நெருக்கடி காரணமாக அவர்களால் சரியாக விளையாட முடியாமல் போய்விடுகிறது.

பெரும்பாலும் இளம் வீரர்கள் அவர்கள் மீது அவர்களே நெருக்கடியைத் திணித்துக் கொள்கிறார்கள். திடீரென ஆட்ட முறையை மாற்றுவதும் விரைவாக அவுட் ஆவதற்குக் காரணமாக அமையும். இந்தத் தொடரில் சில வீரர்களின் ஆட்டம் ஏமாற்றம் அளிப்பதாகவே இருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பெடரரின் சாதனையை முறியடிப்பதே இலக்கு

(லண்டன்)

பெடரரின் சாதனையை முறியடிப்பதே தனது குறிக்கோள் என ரென்னிஸ் வீரர் நடால் தெரிவித்துள்ளார். இனிவரும் போட்டிகளில் வழக்கம் போல் சிறப்பாக விளையாடி கிராண்ட்சிலாம் பட்டங்களை அதிகரிக்க செய்வதே எனது நோக்கம் என தெரிவித்துள்ள நடால், தற்போது 29 வயதே ஆகிறது என்றும் இன்னும் சில ஆண்டுகள் சிறப்பான விளையாட முடியும் எனவும் தெரிவித்தார். நடாலைப் பொறுத்து இனிவரும் வீரர்களால் எட்டிப்பிடிக்க முடியாத சாதனையை நிகழ்த்த முடியும் என விளையாட்டு வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உலகின் நம்பர் ஒன் டென்னிஸ் வீரரான நடால் சமீபத்தில் நடந்த டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 10 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைக் கைப்பற்றியுள்ளார்.

# ரென்னிஸ் ரசிகர்களுக்கு விருந்தாகும் விம்பிள்டன் தொடர் நாளை ஆரம்பம்!

(லண்டன்)

கௌரவம் மிக்க ரென்னிஸ் தொடர் எனக் கருதப்படும் விம்பிள்டன் டென்னிஸ் தொடர் நாளை லண்டனில் ஆரம்பமாகின்றது.

உலகின் முன்னணி வீரர்கள் களமிறங்குகின்ற அதேவேளை, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் களம் இறங்கும் வில்லியம்ஸ் சகோதரிகளுக்கும் முக்கியமான தொடராக அமையவுள்ளது.

நடால், பெரடர், ஜோகோவிச், முராரோ போன்ற முன்னணி வீரர்களுக்கிடையிலும் கடுமையான போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, ஜோகோவிச், பெடரர் ஒரு பிரிவில் உள்ளமையால் நிச்சயம் நடால் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுக்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரெஞ் ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்ற சீனாவின் லிநா மற்றும் வொஸ்னியாக்கி ஆகியோரின் இளமையான ஆட்டத்திற்கு வில்லியம்ஸ் சகோதரிகளால் ஈடுகொடுக்க முடியுமா என்ற கேள்வியும் நிலவுவதாக கருதப்படுகின்றது.

எது எப்படியோ இன்று ஆரம்பமாகும் விம்பிள்டன் தொடர் ரென்னிஸ் ரசிகர்களுக்குப் பெரும் விருந்ததாக அமையும் என விமர்சகர்கள் கருத்து வெளிட்டுள்ளனர்.



# தென்கொரிய 10 வீரர்களுக்கு ஆயுட்கால தடை

(சியோல்)

சூதாட்டத்தில் ஈடுபட்ட தென்கொரியாவின் பத்து கால்பந்து வீரர்களுக்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் கே லீக் என்ற பெயரில் கால்பந்து போட்டி ஏப்ரல் மாதத்தில் நடந்தது.

இந்தப் போட்டியில் சூதாட்ட தரகர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு 2 போட்டிகளில் வீரர்கள் மோசமாக விளையாடி வேண்டுமேன்றே தோல்வியைச் சந்தித்தது தெரிய வந்தது.

இது குறித்து விசாரணை நடத்திய தென்கொரியா புரபொசனல் கால்பந்து லீக் அமைப்பு சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தென்கொரியாவை சேர்ந்த வீரர்கள் 10 பேருக்கு கால்பந்து போட்டி யில் விளையாட ஆயுட்கால தடை விதித்துள்ளது.

அத்துடன் கே லீக் கால்பந்து போட்டியும் இரத்து செய்யப்பட்டுள்ளது. வீரர்கள் சூதாட்டக் காரர்களிடம் பணம் பெற்றது விசாரணை முடிவில் நிரூபிக்கப்பட்டால் வீரர்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது.

# நிர்வாகசேவை வெற்றிடத்தை நிரப்ப அடுத்தமாதம் 400 பேருக்கு நியமனம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவும் நிர்வாக சேவை அதிகாரிகள் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் முதற் கட்டமாக 400 பேருக்கு அடுத்த மாதத்தில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இவர்களுக்கான போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

அண்மையில் பொதுநிர்வாக உள்நாடடலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவுக்கும் மாகாண சபைகளின் செயலாளர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று கொழும்பில் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது நிர்வாக சேவை அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கம நெகும, மக நெகும, திவிநெகும போன்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் சம்பந்தமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

நாடளாவிய ரீதியில் 70 வீதமான நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். இதனையடுத்தே அவற்றை நிரப்பும் நடவடிக்கைகளை தற்போது பொது நிர்வாக அமைச்சு மேற்கொண்டுள்ளது.

# கூட்டமைப்பினர் மீதான தாக்குதல் விசாரணை நடத்த குழுக்கள் நியமனம்

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அளவெட்டியில் நடத்திய கூட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் காமினி சில்வாவின் ஆலோசனைக்கு அமைய, இந்த விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ் பிராந்தியத்திற்கு பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அங்கு வந்த சிலர் தாக்குதல் மேற்கொண்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெளிவுபடுத்துவதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தின் போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின்மீது தாக்குதல் நடத்தப்படும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரசன்னமாகியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவச் சீருடையில் வந்திருந்த சிலரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# ஆசிரியர்களுக்கு உருது மொழிப்பயிற்சி; பாகிஸ்தானுடன் இணைந்து நடவடிக்கை

(கொழும்பு)

**இலங்கையிலுள்ள ஆசிரியர்களுக்கு பாகிஸ்தானின் தேசிய மொழியான உருது மொழியைக் கற்பிக்க உள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.குணவர்த்தன தெரிவித்தார்.**



இது தொடர்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் 107 இலங்கை மாணவர்களுக்கான ஜின்னா புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பட்டார்.

நடைமுறையிலுள்ள கல்வி முறையில் மாற்றத்தை கொண்டுவரவுள்ளதாகவும், இதனடிப்படையில் பாடத் திட்டங்கள், கற்பித்தல் முறைகள் போன்றவற்றில் மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

2012 ஆம் ஆண்டு முதல் க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு 3 மாத காலத்திற்குள் தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதேபோன்று க.பொ.த. (உ/த) எழுதிய மாணவர்களுக்கும் பயிற்சி, தொழிற்பயிற்சி வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த நான்கு வருடத்திற்குள் இலங்கையின் அறிவு மையத்தை விருத்தி செய்வதற்காக 4,400 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பாடசாலைகள், ஆசிரிய பயிற்சி நிலையங்கள் போன்றவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா இலாஹி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினூடாக பாகிஸ்தான் அரசு ஏழாவது தடவையாக இலங்கை மாணவர்களுக்கு ஜின்னா புலமைப் பரிசில் வழங்கியது.

நாட்டின் பல பாகங்கலிருந்து தெரிவுசெய்யப்பட்ட க.பொ.த. (சா/த) மற்றும் (உ/த) கல்வி கற்கும் 107 மாணவர்களுக்கு வருடத்திற்கு 24 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இதுவரை சுமார் 800 இலங்கை மாணவர்களுக்கு ஜின்னா புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் புலிஉறுப்பினர்கள் 600பேர் எதிர்வரும் 30 ஆம் திகதி விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 600 பேர் இம்மாதம் 30ஆம் திகதி சமூகமயப்படுத்தப்பட உள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ. திசாநாயக்க தெரிவித்தார்.

இதுவரையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களை சமூகமயப்படுத்தும் போது அரசாங்கம் பிள்ளைகளுள்ள உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளித்ததாகவும், இம்முறை விவாகமான உறுப்பினர்களுக்கு விசேட கவனம் செலுத்த உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

30ஆம் திகதி விடுவிக்கப்பட உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகவும், புனர்வாழ்வளிக்கப்படும் சகல புலி உறுப்பினர்களும் இவ்வாண்டின் இறுதிக்குள் சமூகமயப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் திசாநாயக்க மேலும் கூறினார்.

# கேரளாவில் ஒளிப்பதிவான சனல் - 4 காணொளிப் பதிவு

## என்கிறது திவயின

(கொழும்பு)

சனல் -4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான காணொளி கேரளாவில் ஒளிப்பதிவு செய்யப்பட்டதென அரசாங்கத்துக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பிரஸ்தாப காணொளி போலியாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட பின், சனல் - 4 தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்டுள்ளமை குறித்து தெரிய வந்துள்ளதாக திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் காணொளி வெளியாவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு முள்ளிவாய்க்கால் என்ற பெயரிலான திரைப்படமொன்று கேரளாவில் திரையிடப்பட்டுள்ளது. ஆயினும், அது தொடர்பில் இந்திய அதிகாரிகள் விசாணைகளை ஆரம்பித்தவுடன் அத்திரைப்படம் மாயமாகி விட்டிருந்தது.

செல்லிடத் தொலைபேசிகள் மூலமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் சனல் - 4 காணொளிகள் வீடியோ கமெரா ஒன்றினாலேயே ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் மூலப்பிரதி இருக்குமாயின், தங்களுக்கு வழங்குமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றவோ, பதிலளிக்கவோ சனல் - 4 தொலைக்காட்சி நிர்வாகம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.


தொலைக்காட்சி நிர்வாகத்தினர் அதனை இணையத்தளத்தில் தரவேற்றியுள்ளனர். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் பரிசோதனைக்கு உட்படுத்த அதனை வழங்காமலிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் பிரஸ்தாப செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பதவி விலகுவதான வெளியான செய்தியில் உண்மை இல்லை என்கிறார் ஜயசுந்தர

(கொழும்பு)

தாம், பதவி விலகல் கடிதத்தை கையளித்ததாக வெளியான தகவல்களை நிதியமைசசின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர மறுத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரஷயாவுக்குப் புறப்படும் முன்னர் ஜயசுந்தர, தமது பதவி விலகல் கடிதத்தை கையளித்தாக தகவல்கள் வெளியாகியிருந்தன.



இதனை மறுத்துள்ள ஜயசுந்தர, தாம் தொடர்ந்தும் பணியைத் தொடர்வதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தில் இணைந்து கொள்வதற்காகவே அவர் பதவி விலகியதாக தகவல் வெளியாகியிருந்தது.

அரச சொத்தை துஷபிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஜயசுந்தர அரச தொழிலில் ஈடுபடக்கூடாது என்று இலங்கையின் உயர்நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

எனினும் இலங்கையின் உயர்நீதிமன்ற வரம்புக்குள் அடங்காத ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரை மீண்டும் நிதியமைச்சின் செயலாளராக நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் ஆணையாளர் பதவி உருவாக்கம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் பதவிக்குப் பதிலாக பொலிஸ் ஆணையாளர் பதவியொன்றை ஏற்படுத்தி அப்பதவிக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை நியமிக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்திருந்த போதிலும், அது இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணையாளர் பதவியொன்றை ஏற்படுத்தி அதன் ஆணையாளராக தன்னை நியமிக்க பாதுகாப்புச் செயலாளர் இணங்கியிருந்ததாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகவியலாளர்கள் சிலரிடம் தெரிவித்திருந்ததை அடுத்தே பாதுகாப்புச் செயலாளர் தனது தீர்மானத்தில் மாற்றம் செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஆணையாளர் பதவியொன்றை உருவாக்குவது தொடர்பாக ஊடகங்களுக்கு செய்தி வழங்கியது யார் என கண்டறியும்படி புலனாய்வுப் பிரிவினருக்கு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு இந்தத் தகவலை வழங்கியது சவேந்திர சில்வாவே என்பது தெரியவந்ததை அடுத்தே இந்த முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்புத் தரப்பில் விரிசல்நிலை தோன்றியுள்ளது.

# அர்ப்பணிப்பை மேற்கொண்ட ஆசிரியர்களை கௌரவிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

## கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

கல்விக்காக அர்ப்பணிப்பை மேற்கொண்ட ஆசிரியர்களை கௌரவிக்கும் விசேட வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் திறமை மிக்க எதிர் கால சமூகத்தை உருவாக்கும் முக்கிய சக்தியாக ஆசிரியர்களே இருந்தபோதும், தற்போது பக்கசார்பான குழுக்கள் ஆசிரியர்களையும் பயன்படுத்தி தமது அரசியல் இலக்கை அடைவதற்கு சதி நடவடிக்கை களில் ஈடுபடுகின்றனர்.

ஆசிரியர் தொழிலின் உயர் கௌரவத்தைக் கூட இவர்கள் அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இதனால் ஆசிரியர் தொழிலின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு முக்கிய இடம் அளிக்குமாறு அமைச்சர் ஆசிரியர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாடசாலைகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாடுமுழுவதிலுமுள்ள பாட சாலைகளை இலக்காக கொண்ட பாடசாலைகளுக்கான அனைத்து வளங்களையும் வழங்கி, வலுவூட்டுவதற்கான 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

4 ஆரம்ப பாடசாலைக்கு ஒரு முக்கிய பாடசாலையை உருவாக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பாட சாலைகளின் தரத்தை உறுதி செய்வதற்கான சான்றிதழ் வழங்கும் வேலைத்திட்டத்தையும் அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது.


தொழில் சந்தைக்கு பொருத்தமான ஆற்றல் மற்றும் திறமை கொண்ட சமூகத்தை உருவாக்கும் நோக்கில் பாடசாலை கற்கைநெறிகளில் புதிய பாடங்கள் உள்வாங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கட்டுநாயக்க சம்பவம் போன்று எதிர்காலத்தில் நடைபெறக்கூடாது

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

(கொழும்பு)

பொலிஸாரின் நடவடிக்கைகளை முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய விமர்சனம் செய்துள்ளார். உத்தியோகபூர்வமாக பதவி விலகுவதனை அறிவிக்கும் நோக்கில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடைபெற்றதனைப் போன்ற சம்பவங்கள் எப்போதும் இடம்பெறக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் நடத்திய போராட்டத்தின் போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை பொலிஸார் ஏற்றுக் கொண்டிருந்தால் அனர்த்தங்கள் இடம்பெற்றிருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது உத்தரவுகளை ஏற்றுக் கொள்ளாது சில உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் செயற்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறெனினும், 85,000 பேர் கடமையாற்றி வரும் பொலிஸ் திணைக்களத்தின் ஒட்டு மொத்த ஊழியர்களுக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுநாயக்க சம்பவமே தம்மை பதவி விலகுவதற்கு உந்தியதாகத் தெரிவித்துள்ளார்.

# பல்கலை அனுமதிப் பரீட்சைக்கான காலவரையறைகள் அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும் புதிய மாணவர்களுக்கு ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான காலவரையறை உயர் கல்வியமைச்சினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரையான 10 நாட்கள் விண்ணப்பங்களை கோரமுடியும் என அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இணையத்தள வசதிகளை பயன்படுத்தி நாடளாவிய ரீதியாக உள்ள நோட்ஸ் எக்ஸஸ் மத்திய நிலையங்கள் ஊடாக இந்த விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியும்,

நுழைவுப் பரீட்சை இடம் பெறும் தினம் மற்றும் நேரம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி www.pop.nodes.lk/popex என்ற இணையத்தளத்தில் ஊடாக தகவலை பெற்றுக் கொள்ள இயலும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தள வசதிகள் அற்ற மாணவர்கள் நோட்ஸ் எக்ஸஸ் மையங்கள் ஊடாக தமது பரீட்சைகள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என உயர்கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கை - சுவிஸ் இடையே நேரடி விமான சேவை

(கொழும்பு)

இலங்கைக்கும் சுவிட்சர்லாந்திற்குமிடையில் நேரடி விமான சேவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 23ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் சூரிச் நகருக்கான நேரடி விமானசேவை நடத்தப்பட்ட போதிலும், பின்னர் அது இடை நிறுத்தப்பட்டது. சூரிச்சிற்கான விமான சேவையை ஆரம்பிப்பதன்மூலம் சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ஒஸ்திரியா போன்ற நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கும், இலங்கையர்களுக்கும் பெரும் நன்மைகள் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வாரநாட்களில் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்களில் இந்தச் சேவைகள் நடத்தப்படவுள்ளதென்றும் தெரியவருகிறது.

# கூட்டுறவுதின விழாவை கொண்டாட ஏற்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் கூட்டுறவு தினவிழா ஒன்றை இம்மாத இறுதியில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்து வருவதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.


யாழ்.மாவட்ட கூட்டுறவு ஆணையாளரிடம் இதற்கான அனுமதி பெறப்பட்ட பின்னர் இவ்விழா கொண்டாடப்படும். அத்துடன் இவ்விழாவில் முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர்களுடைய படங்கள் வைக்கப்பட்டு கௌரவிக்கப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பஸ்கட்டண அதிகரிப்பு; இறுதித் தீர்மானம் 27இல்

(கொழும்பு)

பேருந்து கட்டணங்களின் சீர் திருத்தம் தொடர்பாக எதிர் வரும் 27ஆம் திகதி இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்பட வுள்ளதாக அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பஸ்கட்டணங்களை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்த அரசு அதிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லை

## குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் குறித்து ஆராய ஆணைக் குழுவொன்றை நியமித்துள்ள அரசாங்கம் இதுவரை பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, யுத்தத்தின் போது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவே நியமிக்கப் பட்டது. ஆயினும் அதன் விசாரணைகளில் பொதுமக்கள் சுதந்திரமாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியாத அச்சுறுத்தல் நிலையேற்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பதிவு நடவடிக்கை மூலம் அங்குள்ள மக்களை அச்சுறுத்தும் இராணுவ நடவடிக்கை வலிகாமம் பிரதேச ஜே.வி.பி. அமைப்பாளர் தங்கேஸ்வரனின் கடும் எதிர்ப்புக் காரணமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக அரசாங்கம் நாட்டு மக்களின் துன்பங்களிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு அவற்றுக்கான தீர்வைத் தேடுவதற்குப் பதிலாக தொடர்ச்சியாக மேலும் மோசமான துன்பங்களை பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விட முயற்சிக்கின்றது.

அதன் மூலம் எதிர்காலத்திலும் இந்நாட்டில் பிரச்சினைகள் தலைதூக்குவதற்கான பின்னணியை வேண்டுமென்றே உரு வாக்க அரசாங்கம் முயல்கின்றது. அந்தவகையில் கற்றுக் கொண்ட பாடங்கள் குறித்து ஆராய ஆணைக்குழுவொன்றை நியமித்த அரசாங்கம் அதிலிருந்து சற்றேனும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பது புலனாகின்றது என்றும் ஜே.வி. பி. தெரிவித்துள்ளது.



மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற தெல்லிப்பளை பொலிஸாரின் நடமாடும் சேவையில் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேராவின் மேற்பார்வையில் பொலிஸார் மக்களுக்கான சேவையை வழங்குவதையும், வறுமைக்கோட்டில் உட்பட்ட பெண் ஒருவருக்கு பொலிஸாரினால் சேகரிக்கப்பட்ட பணத்தொகையை பொலிஸ் அத்தியட்சகர் வழங்குவதையும், கலந்துகொண்ட மக்களையும் காணலாம்.

# அளவெட்டியில் நடந்தது என்ன?

கடந்த புதன்கிழமை அளவெட்டி மகாஜனா சபை மண்டபத்தில் நடைபெற்ற அமளி துமளியில் முடிவடைந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நடந்த சம்பவங்கள் தற்போது வெளிவந்துள்ளன.

இக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காங்கேசன்துறைப் பொறுப்பாளர் மற்றும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களிடமிருந்து தெரியவரும் விபரங்களின்படி நடந்த உண்மைச் சம்பவங்கள் வருமாறு.

இக்கூட்டம் மாலை 3 மணியளவில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், மாலை 6 மணிக்குப் பின்னரே கூட்டம் ஆரம்பமாகியிருந்தது. அத்துடன் இக் கூட்டத்தில் ஆகக் கூடியளவு 50 பேர்கள் வரையிலேயே சமுகமளித்திருந்துள்ளனர். அத்துடன், இவர்களுள் 25 பேர் வரை உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இக் கூட்டம் பற்றிய விபரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்த பின்னர், இக் கூட்ட ஏற்பாட்டுக்கான அனுமதியைப் பெறும்படி இக் கூட்ட ஏற்பாட்டாளர் உள்ளூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திலுள்ள ஒருவரினால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார் எனத் தெரியவருவதுடன், இதுவரை தெரியவராத காரணங்களுக்காக இவ் அறிவுறுத்தல் உதாசீனப்படுத்தப்பட்டு கூட்ட ஏற்பாட்டாளர்களினால் இக் கூட்டத்திற்கான பொலிஸாரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இக் கூட்டம் ஆரம்பமாகிய பின்னர் இராணுவத்தினர் வந்திருந்து கூட்டத்திற்கான அனுமதி பெறப்பட்டிருந்ததா என விசாரித்துள்ளனர். அப்போது அவ்வாறு அனுமதிகள் ஏதும் பெறப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனுமதியின்றி கூட்டத்தை நடாத்துவது சட்டப்படி தவறு என்றும் கூட்டத்தை நிறுத்தமாறும்கூறி திரும்பிச் சென்றுள்ளனர்.



அவர்களுடைய இந்த அறிவுறுத்தலையும்மீறி கூட்டம் தொடர்ந்து நடந்துள்ளது. அத்துடன் இக் கூட்டத்தில் பேசியவர்கள், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் பேச்சு இனக் குரோதத்தையூட்டும் வகையில் அமைந்திருந்ததாக இக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த ஒருவர் கவலை தெரிவித்தார்.

இப் பிரசாரக்கூட்டம் ஆரம்பமாகி, இரண்டு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்கள் முடிவடைந்து மூன்றாவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பேசிக் கொண்டிருந்தபோது சீருடையில் வந்திருந்த ஏறத்தாள பத்து இராணுவத்தினர் கூட்டத்தை கலைக்க முற்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புப் பிரிவினருடன் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு, இரு தரப்பிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதே நேரத்தில் வந்திருந்த இராணுவத்தினர் சிலர் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களை பொல்லுகளால் தாக்கி விரட்டி அடித்துள்ளனர். இது தவிர, அங்கிருந்த வாகனங்கள் எவையும் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கவில்லையென்றே தெரியவருகிறது. அக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தமது வாகனங்களில் வந்திருந்தனர் எனவும், ஏனையோர் மோட்டார் சைக்கிள்களிலும், துவிச்சக்கர வண்டிகளிலுமே வந்திருந்ததாக தெரிவிக்கப்படுவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரினதும் வாகனங்கள் எவையும் தாக்குதல்களுக்கு உள்ளாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.


கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் அல்லோலகல்லோலப்பட்டு எழுந்து ஓடும்போது அங்கு தரித்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்து சில சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமென்றே பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அத்துடன், கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பலரும் மறுநாள் காலையிலேயே திரும்பிச் சென்று தமது மோட்டார் சைக்கிள்களையும், துவிச்சக்கர வண்டிகளையும் எடுத்துச் சென்றதாகவும், அவைகள் எவையும் அடித்து நொருக்கப்பட்டதாக அடையாளங்கள் எவையும் இருக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

இவைகளே உண்மையில் நடந்த சம்பவமாயிருக்க யாழ்.குடா நாட்டுப்பத்திரிகைகள் சில இச்சம்பவத்தை திரித்து ஊதிப் பெருப்பித்து செய்திகளை வெளியிட்டுள்ளன. இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே இக்கூட்டத்திற்கு பொலிஸாரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லையெனவும், 10இற்கும் 15இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான இராணுவத்தினரே ரகளையில் ஈடுபட்டதாகவும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ள நிலையில், பொலிஸாரின் அனுமதிபெற்றே இக்கூட்டம் நடாத்தப்பட்டதாகவும், கூட்ட மேடையில் மட்டும் 50இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஏறி தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இப் பத்திரிகைகள் செய்திகளை திரித்து வெளியிட்டுள்ளன.

(நன்றி- தேனீ)

# வடபகுதி மக்களும் சுதந்திரமாக வாழ வழியேற்படுத்த வேண்டும்

## ஜே.வி.பி.கோரிக்கை



(கொழும்பு)

நாட்டில் வாழும் எந்தவொரு இனமக்களையும் அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் உரிமை அரசாங்கத்துக்குக் கிடையாது என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

வடக்கில் வாழும் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வண்ணமான சில நடவடிக்கைகளை கடந்த சில நாட்களாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதன் காரணமாக அங்குள்ள மக்கள் கடும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிடுள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் போன்றாயினும் வடக்கில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. வடக்கில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளுக்கு அரசாங்கத்தினால் பாரிய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் வாழும் மக்கள் பலவந்தமாக இராணுவப் பதிவுக்குள்ளாக்கப்படுகின்றார்கள். மறுபுறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்திற்கு இராணுவத்தை ஏவி தாக்குதல் நடாத்தப்படுகின்றது. தற்போது வடக்கில் அடக்கு முறை ஆட்சியே நிலவுகின்றது. அதனை அரசாங்கம் கைவிட்டு அங்குள்ள மக்களையும் நாட்டின் ஏனைய பிரதேச மக்கள் போன்று சுதந்திரமானவர்களாக வாழ இடமளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கூட்டமைப்பு மீதான தாக்குதல்; ஐ.தே.கட்சி கடும் கண்டனம்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கூட்டமொன்றின் மீது படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகக் கருதப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை முன்னிட்டு பல்வேறு தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஜனநாயக விரோதத் தாக்குதல்கள் தேர்தல்களை சுயாதீனமான முறையில் நடாத்துவதற்கு பாரிய இடையூறாக அமையக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பங்கள் இடம்பெறுவதனைத் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# அளவெட்டித் தாக்குதல் சம்பவம்; அடிப்படை மனித உரிமை மீறல் மனு

## தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் தாம் நடத்திய கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய படையினரையும் வழி நடத்திய படை அதிகாரிகளையும் தம்மால் அடையாளம் காட்ட முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அளவெட்டியில் நடந்த படையினரின் தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன், சரவணபவன், சுமந்திரன், சிறிதரன் ஆகியோர் பிரசன்னமாகியிருநதனர்.

ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே இந்தத் தகவலை அவர்கள் வெளியிட்டனர்.

பொலிஸார் மேலதிகமான வாக்குமூலங்களை தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வைத்துப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்த அவர்கள், தாங்கள் இத்தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய, தம்முடன் உரையாற்றிய படை அதிகாரிகளையும் மேற படி தாக்குதல் நடத்திய படைச்சிப்பாய்களை வழிநடத்திய படை அதிகாரியையும் அடையாளம் காட்டத் தயாராக இருப்பதாக தெரிவித்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரிலேயே இந்தக் கூட்டம் நிறுத்தப்பட்டதாக அங்கு வந்த படை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சுமந்திரன் தெரிவித்தார்.

அளவெட்டியில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின் போது இராணுவத்தினர் மேற கொண்ட தாக்குதலை எதிர்த்து உயர நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசித்து வருகிறது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடல் அளவெட்டியில் நடைபெற்றது. கூட்டமைப்பின் எம்.பிக்கள் கலந்துகொண்ட இந்தக் கலந்துரையாடலில் திடீரெனப் புகுந்த இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒனறைத் தாக்கல் செய்வது தொடர்பாக தற்சமயம் ஆலோசனை நடத்தி வருகின்றோம். இராணுவத்தினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனென்றால், இராணுவம் தாக்குதல் நடத்தியதை நாம் நேரில் கண்டோம் என்றார் அவர்.


அளவெட்டி பிரதேசத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றை நாம் நடத்தவில்லை. தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையே நடத்தினோம். கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு எவரிடமும் அனுமதி பெறத்தேவையில்லை என்றும் கூறினார்.

# ஓநாயாக மாறிய...



திகில் படங்களில் இடம் பெறுவது போல் ஓநாயாக மாறி மனிதர்களை கடித்துக் குதறிய வாலிபரை பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர். தாமஸ் ஸ்டர்.:.ப் என்ற வாலிபர் பேய் படங்களில் வருவது போல் இரவு நேரத்தில் நிலவு தோன்றும் போதெல்லாம் ஐந்து அறிவு ஜீவராசியான ஓநாயின் சுயரூபத்தை அடைகிறார். இதனால் அருகில் உள்ள மனிதர்களை கடித்து குதறுவது மட்டுமின்றி, பொருட்களையும் சேதப்படுத்துகிறார். மேலும் கூர்மையான ஆயுதங்களை கொண்டு மனிதர்களை தாக்குவது மட்டுமின்றி ஓநாய் போன்று ஊளையிட்டு அனைவரையும் மிரட்டியதால் பொலிஸார் அவரை சிறைக்கு பின்னால் தள்ளி உள்ளனர். இதனால் அப்பகுதி மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர்.

# சுட்டிப் பெண்கள்



உலகில் குட்டிப்பெண்களாக சாதனை படைத்தவர்களில் இருவர் உலகசாதனை புத்தகத்தில் பதியப்பட்டவர்களாக கருதப்படுகின்றனர். ஒரு பெண் இந்தியாவைச்சேர்ந்தவர். இன்னொருவர் கனடா நாட்டை சேர்ந்தவர். இவர்கள் இருவரைப்பற்றிய தகவல்களை தருகிறோம். முதலில் காட்டப்பட்டுள்ள இந்த சுட்டிப்பெணின் பெயர் kenadie. இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி பிறந்தவர். வெறும் 2 இறாத்தல்களும் 8அவுன்ஸ்கள் மாத்திரமே..




அருகிலுள்ள சுட்டிப்பெண் உலகின் வாழும் மிகச்சிறிய பெண் என்ற சாதனைக்காக இந்தி கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றவர். உலகின் மிகச்சிறிய பெண்ணான ஜோதி இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் வசித்து வாருகிறார். 16வயதான ஜோதி பார்ப்பதற்கு சிறிய குழந்தை போல் இருக்கிறார். ஜோதியின் 23 இன்ச் உயரமும் 5 கிலோ எடையும் கொண்டவர் ஆவார். மற்ற அனைத்து பிள்ளைகளை போல ஜோதியும் பள்ளிக்கு சென்று வருகிறார். ஒரு நடிகையாக வேண்டும் என்பது அவரின் விருப்பமாம்.

# மீன் செதில்களுடன் குழந்தை



மேற்கு சீனாவில் உள்ள ஜின்ஹ நகரை சேர்ந்தவன் சாங்ஷெங். இவன் கடந்த வருடம் பிறந்தான். பிறக்கும்போது அவனது உடலில் முடி வளர்வதற்கான மயிர்க்கால்கள் எதுவும் இல்லை.

இதனால் உடலில் இருந்து வியர்வை வெளியேறாமல் மிகவும் அவதிப்பட்டு வந்தான். இந்த நிலையில் அவனது உடலில் மீன் போன்ற செதில்கள் வளரத் தொடங்கியது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் அவனை வைத்தியர்களிடம் சென்று காட்டினர். பரிசோதனை செய்த வைத்தியர்கள் மிகவும் குழப்பம் அடைந்தனர். அவனுக்கு ஏற்பட்டுள்ள நோயை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் உடலில் இருந்து வெப்பத்தை குறைக்க அவன் மிகவும் சிரமப்பட வேண்டியது இருக்கும். இதற்காக அவனை ஐஸ் கட்டிக்குள் வைக்க வேணடிய நிலை ஏற்படும். இது ஒரு வகை மரபு நோய் என்றும் தெரிவித்தனர். இவனை அனைவரும் மீன்சிறுவன் என்றே அழைக்கின்றனர்.

# கர்ப்பிணிகள் பேசினால்...



கர்ப்பமடைந்த பெண்கள் மொபைல்போன் பயன்படுத்தினால், அவர்களின் குழந்தைகள் முரட்டுத்தனம் கொண்டவர்களாக மாறும் வாய்ப்பு உள்ளது என அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மொபைல்போனுக்கும், குழந்தைகள் நலனுக்கும் உள்ள தொடர்பு பற்றி அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலை பேராசிரியர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

இதுகுறித்து ஆய்வுக்குழுத் தலைவர் லீகா கெய்பட்ஸ் கூறியதாவது:

மொபைல்போன் மற்றும் குழந்தைகள் நலன் பற்றிய இந்த ஆய்வில், 7 வயதான 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களும், அவர்களின் பெற்றோரும் கலந்துகொண்டனர். அதே போல், 1996 முதல் 2002 வரை கர்ப்பமடைந்த பெண்கள் பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன. ஒரு இலட்சம் பேரிடையே நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில், கர்ப்பமடைந்த பெண்கள் தொடர்ச்சியாக மொபைல் போன் பயன்படுத்தினால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர் என தெரிய வந்துள்ளது.

ஆய்வில் பங்குபெற்ற 3 சதவீத குழந்தைகள் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சில சமயம் முரடர்கள் போல் நடந்து கொண்டனர். உடல் பருமன், எளிதில் உணர்ச்சி வசப்படுதல் போன்ற பாதிப்புகளையும் கொண்டிருந்தனர். இதற்கு சிறுவர்களின் தாய் கர்ப்பமாக இருந்த காலத்தில், தொடர்ச்சியாக மொபைல்போன் பயன்படுத்தியது தான் காரணம் எனத் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட பெற்றோரும் இதை ஒப்புக் கொண்டுள்ளனர். எனினும், இதுகுறித்து தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது என லீகா கூறினார்.

# ஒலிகளுக்கான தளம்

பிரசன்டேஷன் பைல் ஒன்று தயாரித்துக்கொண்டிருக்கிறீர்கள். குறிப்பிட்ட ஓர் இடத்தில், நீங்கள் விரும்பும் ஒலி அல்லது ஓசை ஒன்றைத்தர விரும்புகிறீர்கள். என்ன செய்கிறீர்கள்? நான் ஒருமுறை சிறுவர்களுக்கான பிரசன்டேஷன் பைலில் கண்டாமணி சத்தம் (Gong) கொடுத்தால் நன்றாக இருக்கும் என எண்ணி, குறிப்பிட்ட அந்த ஓசைக்கான பைல் எங்கு கிடைக்கும் என்று தேடினேன்.

இத்தகைய விருப்பங்களை நிறைவேற்றவே Soungle என்று ஒரு வெப்சைட் உள்ளது. காடு என்பதற்கான ஆங்கிலச்சொல்லான Jungle மற்றும் ஒலி என்பதற்கான சொல் Sound என இரண்டையும் சேர்த்து இந்த பெயரைத் தந்திருக்க வேண்டும் என நான் எண்ணுகிறேன்.

இந்த தளம் சென்று நான் விரும்பும் ஒலிக்காக Gong என்று டைப் செய்தேன். அந்த தளத்தில் 27 வகையான கண்டாமணி சத்தம் கிடைத்தது.

பக்கத்திலிருந்த ஒரு சிறுவன் கிளாரினட் ஒலி எப்படி இருக்கும் என்று காட்டுமாறு கூறினான். சந்தேகத்துடனேயே Clarinet என டைப் செய்து என்டர் அழுத்த 12 வகையான கிளாரினட் ஒலி கிடைத்தது. ஒற்றை ஒலி முதல் பல சேர்ந்தது வரையிலான ஒலித்தொகுப்பு வரை தரப்பட்டது.

இதனை எப்படி நாம் பயன்படுத்துவது? உங்களுக்குப்பிடித்த ஒலியைத்தேடிக் கண்டறிந்தவுடன், அந்த சாம்பிள் ஒலி அருகே டவுண்லோட் கிளிக் செய்தால், உங்கள் பிரவுசரின் அடிப்படையில் சேவ் அல்லது சேவ் அஸ் கிடைக்கும். பின் இந்த பைலை நீங்கள் விரும்பும் இடத்தில் பயன்படுத்தலாம்.

ஒரே வாத்தியத்தின் பல்வேறு ஒலிகளை (Notes) சேர்த்துப்பெற்றுப் பயன்படுத்துவதும் நன்றாக இருந்தது. இதிலிருந்து ஓசைக்கான பைலை எடுத்துப் பயன்படுத்துகிறீர்களோ இல்லையோ, ஒருமுறை இந்த தளம் சென்று பார்த்துவிடுங்கள்.

இதற்கான முகவரி:- http://www.soungle.com/

கணினி மூலை

# விசித்திர தக்காளி



பொதுவாக தக்காளிப்பழங்கள் குளிர்சாதனப்பெட்டியில் பராமரித்து வைத்தால் கூடி ஒரு வாரத்தின் பின்னர் அது பழுதடைய ஆரம்பிக்கும். ஆனால் ஒரு மாதகாலமாக ஒரு தக்காளி பழுதடையால் இருக்கிறது வவுனியா பிரதேசத்தில். குறித்த தக்காளிப்பழம் அழுகாமல் இருக்கும் ஆச்சரியத்தை விட முக்கிய விடயம் குறித்த தக்காளிப்பழம் விசித்திரமான வடிவத்தில் அமைந்துள்ளமையே. வவுனியா, உக்குளாங்குளம் எனும் பகுதியில் சமையலுக்காக சந்தையில் கொள்வளவு செய்யப்பட்ட தக்காளி ஒன்று சுடர் விடும் விளக்கு போன்று அதிசய வடிவில் அமைந்துள்ளது. இது மாத்திரமின்றி குறித்த தக்காளிப்பழம் இரு மாதங்களுக்கு மேலாக ஆகியும் கூடி பழுதடையாமல் காணப்படுகின்றமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்த அதிசய தக்காளிப்பழம் இலங்கையின் பிரபல பாடகரும், இசையமைப்பாளருமான வவுனியாவைச் சேர்ந்த கந்தப்பு ஜெயந்தன் அவர்களது வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதனை அக்கம் பக்கம் உள்ளவர்கள் என பலர் பார்வையிட வருகின்றனர்.

# இலங்கை அகதி மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேரலாம்

## தமிழக உயர்கல்வித்துறை அறிவிப்பு

(சென்னை)

**தமிழ்நாட்டில் படித்த இலங்கை அகதிகளின் குழந்தைகள் பொறியியல் கல்லூரிகளில் நேரடியாக 2ஆம் ஆண்டில் சேரலாம்.**

இதுகுறித்து உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆர்.கண்ணன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறப்பட்டிருப்பதாவது,

தமிழக பாலிடெக்னிக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு முடித்து தேர்வு பெற்ற தகுதியான இலங்கை அகதி மாணவர்களை, மற்ற மாணவர்களோடு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில், ஒற்றைச் சாளர கலந்தாய்வில் பொதுப் பிரிவின் கீழ்தர வரிசையில் சேர்க்கப்பட்டு, நேரடி இரண்டாம் ஆண்டிற்கான பொறியியல் பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்தும், தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு முடித்து, தேர்வு பெற்ற தகுதியான இலங்கை அகதி மாணவர்களை மற்ற மாணவர்களோடு எம்.இ., எம்.டெக்., எம்.ஆர்க். சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் மற்றும் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் பொதுப் பிரிவின் கீழ் தர வரிசையின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளலாமா என்று அரசுக்கு தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கடிதம் எழுதியிருந்தார்.

அவரது கோரிக்கையை நன்கு பரிசீலனை செய்த அரசு, 2011, 2012ஆம் கல்வியாண்டு முதல் இலங்கை அகதிகள் முகாம்களில் இருந்து பொறியியல் கல்லூரிகளில் நேரடி இரண்டாம் ஆண்டு பி.இ., பி.எட். மற்றும் முதுகலை பட்டப் படிப்பு எம்.பி.ஏ., எம்.சி.ஏ., எம்.இ., எம்.டெக், எம்.ஆர்க் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்விலும் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட ஆளறிச் சான்றிதழுடனும், அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப் பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச் சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், என்ஜினீயரிங் கல்லூரிகளில் மற்ற மாணவர் சேர்க்கை முடிவுற்ற பின், அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மிகாமலும், பொதுப்பிரிவின் கீழ் காலியிடங்கள் ஏதும் இருந்தால் அதில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க அனுமதி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

இந்தியச் செய்திகள்

# கனிமொழியின் பிணை மனுவை விசாரிக்க விரும்பாத நீதிபதிகள்

(சென்னை)

கனிமொழியின் பிணை மனுவை விசாரிக்க தங்களுக்கு விருப்பமில்லை என்று உச்சநீதி மன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர்.

கனிமொழி எம்.பியும், கலைஞர் ரி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.


இவர்கள் இருவரும் டெல்லி உயர்நீதிமன்றில் பிணை கேட்டு மனுத் தாக்கல் செய்தனர். அம்மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து இருவரும் உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர். இம்மனு மீதான விசாரணை நடந்துக்கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் கனிமொழியையும்,கலைஞர் ரி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமாரையும் பிணையில் விடுவிக்க உச்சநீதி மன்றத்தில் சி.பி.ஐ நேற்றுமுன்தினம் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சதாசிவம் மற்றும் ஏ.கே.பட்நாயக் ஆகியோர் 2ஜி விவகாரம் தொடர்பாக,கைது செய்யப்பட்டுள்ள தி.மு.க., எம்.பி. கனிமொழியின் பிணை மனுவை விசாரிக்க தங்களுக்கு விருப்பமில்லை என்று கூறியுள்ளனர்.

# மேலும் 4 செயற்கை கோள்கள் இவ்வருடம் செலுத்தப்படும்

(சென்னை)



இவ்வருடம் மேலும் 4 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ தலைவர் கே. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இஸ்ரோ வடிவமைத்துள்ள ஜி சாட் 12 செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி. சி.17. ரொக்கெட் மூலம் ஜுலை இரண்டாவது வாரத்தில் விண்ணில் ஏவப்படுகிறது.

செப்டம்பர் மாதம் மேகா டிரோபிக்ஸ் என்ற செயற்கைக் கோள், விண்ணில் செலுத்தப்படும். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு செயற்கைக் கோள்கள் கடல்வளத்தை ஆய்வதற்காக வரும் டிசம்பர் மாதம் விண்ணில் ஏவப்படுகின்றன என்றார்.

# திராவிட இனம் என்பதே இல்லை அது ஒரு பகுதியின் பெயராம்

## சுப்பிரமணியம் சுவாமி கண்டுபிடிப்பு

(சென்னை)



திராவிட இனம் என்பதே இல்லை. திராவிடம் என்பது ஒரு பகுதியின் பெயர் என மதுரையில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் ஜனதா கட்சி தலைவர் சுப்ரமணிய சுவாமி தெரிவித்தார்.

திராவிட இனம் என்பதே இல்லை. திராவிடம் என்பது ஒரு பகுதியின் பெயர். தென்னிந்தியாவின் ஒரு பகுதி திராவிடம் என ஆதிசங்கரர் கூறியுள்ளார். ஆங்கிலேயர் திராவிடர், ஆரியர் என இன பாகுபாட்டை ஏற்படுத்தினர்.

இராவணன் ஒரு பிராமணர். ஆனால் ராமர் சத்தியர் குலத்தில் தோன்றியவர். ராவணனை கொன்ற ராமரை தான் வழிபடுகின்றனர். பெண் ஆசை காரணமாக ராவணன் உயிரிழந்தான். அனைவரும் சட்டத்திற்கு, தர்மத்திற்கு கட்டுப்பட வேண்டும். முன்னோர்கள் தர்மத்திற்கு முக்கியம் கொடுத்தனர். பிறப்பு, நிறம், மொழியை வைத்து வேறுபாடு கூடாது. சமஸ்கிருதம், தமிழ் போன்றவை பிராமி எழுத்துக்களில் இருந்து உருவானவை. அனைத்து மொழிகளையும் கற்கவேண்டும். அமெரிக்கா நாசா விஞ்ஞானிகள் கூட, கம்ப்யூட்டருக்கு ஏற்ற மொழி சமஸ்கிருதம் என தெரிவித்துள்ளனர். அங்கு சமஸ்கிருதம் கற்க ஸ்கொலர்ஷிப வழங்கப்படுகிறது. ஊழலுக்கு காரணம் பேராசை. வீடு, வாகனம் வாங்கும் ஆசையே ஊழலுக்கு வழிவகுக்கிறது எனத் தெரிவித்தார்.




# ஒளியைத் தேடுவோம்

"தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள்"

*(யோவான் 3:20-21)*

ஏன் மனிதர்கள் உண்மை, நேர்மை, நன்மையைவிட பொய்மை, அநீதி, தீமைமீது அதிக நாட்டம் கொள்கின்றனர்? இந்தக் கேள்விக்கான விடை: மனிதரின் செயல்கள் தீயனவாய் இருப்பதால். அதாவது, மனித இதயத்தின் ஆழத்திலேயே தீமையும், இருளும் மண்டிக் கிடப்பதால், ஒளியைவிட இருளே அதிகமாக மானிடரை ஈர்க்கிறது. தீமையின்மீதுள்ள ஈர்ப்புக்குக் காரணம் மனிதரின் மனதிற்குள்ளே புதைந்திருக்கும் இருள்தான் என்கிறார் ஆண்டவர்.

ஊரெல்லாம் ஒளி வெள்ளமாக இருந்தாலும் சிலர் ஒதுங்கியே இருப்பர். ஊரெல்லாம் ஒன்று கூடி மகிழும்போதே அவர்கள் மட்டும் வேறெதையோ நோட்டமிட்டிருப்பார்கள். கலகலப்பாக கலக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இப்படி ஒரு சிலர் கல்லாகி மூலையில் முடங்கிக்கிடப்பர்.

இப்படி இயல்பானதை விட்டு விட்டு, முரணான முறையில் செயற்படும்போது அவனில் ஏதோ ஒரு குறை உள்ளது என்று பொருள். ஒளியில் வந்தால் தன் அழுக்கு, அசிங்கம், குறை. குற்றம் தனக்குத் தெரிய வரும். பிறர் தெரிய நேரிடும். தன்போக்கினை மாற்ற வேண்டும் என்ற தயக்கம். கோயிலுக்கு வந்தால் தன் பாவ வாழ்வு தனக்குத் தெரிய வரும். மனமாற்ற வாழ்வுக்கு தயாராக வேண்டுமே என்ற பயம்.

நாலுபேரோடு கூடி கலகலப்பாக நல்லதைச் செய்ய பலவற்றை இழக்க வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டு கிடைக்கும் இன்பத்தைவிட வலி இல்லாமல் கிடைக்கும் அற்ப இன்பம் போதும் என விட்டில் பூச்சிகளாய், ஒளியைவிட இருளையே விரும்பி வாழ்வை இழந்து விடுகின்றனர். ஒளியைத் தேடுவோம். இனிது வாழ்வோம்.

*யா.அலெக்ஸ்சாண்டர்*
*மறையாசிரியர்.*

# தமிழக சட்டசபைத் தீர்மானங்களும்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வடக்கு, கிழக்கு பிரிவை கையாண்டுள்ளது. இலங்கையின் உயர் நீதிமன்றம் ஒரு முன்மாதிரியை காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கம் புலிகள் பிரச்சினையை தீர்த்திருக்கலாம். ஆனால் அது அடிப்படையாக உள்ள பிரச்சினைகளை தீர்க்கவில்லை. இது புலம்பெயர்ந்தோர் பற்றியதல்ல. இது இலங்கையிலுள்ள, யுத்தத்துக்கு முகங்கொடுத்த, அதன் விளைவுகளால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றியது.

அபிப்பிராயங்கள் ஒரே மாதிரி இருக்கமாட்டா. இதற்கு இந்தியாவும் இலங்கையும் விதிவிலக்கல்ல. இன்னொரு உதாரணமாக இலங்கையில் நடந்த பாதுகாப்பு மாநாட்டில் "வெள்ளைக் கொடி" விவகாரத்தில் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் லோறன்ஸ் கூறிய கருத்து அவருடைய சொந்தக் கருத்து எனக் கூறி அமெரிக்கா, அக்கருத்திலிருந்து விலகியுள்ளது.


வேறு ஒரு நாட்டில், இப்படி ஒன்று நடக்கவேயில்லை என்று மறுத்திருக்கலாம். அரசாங்கம் ஒன்றின் வெவ்வேறு துறைகளுக்கிடையிலும் வித்தியாசமான பார்வைகள் இருக்கமுடியும். இலங்கையில் யுத்தம் மும்முரமாக நடந்த சமயத்தில் அப்போது இராணுவ தளபதியாகியிருந்த சரத் பொன்சேகா, தமிழ் சிறுபான்மையினர், பெரும்பான்மையினரான சிங்கள பௌத்தர்களுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டுமென கூறியிருந்தார்.

இலங்கையின் அரசியல் தலைமைப்பீடமும், இராஜதந்திர சேவையினரும் இதை மறுத்துரைக்கும் பெரும் முயற்சியில் ஈடுபட்டனர். தற்போதைய நிலையில், கண்ணாடி வீட்டில் வசிக்கும் இலங்கையும் இலங்கையரும் இந்தியாவை குறைகாண முடியாது. அவர்கள் தமக்குள் காணப்படும் இந்தியாவுக்கு எதிரான சக்திகளை கட்டுப்படுத்தவில்லை. என்ன பிரச்சினைகள் காணப்படினும் இந்த இரண்டு நாடுகளினதும் உள்நாட்டு அரசியல் ஒன்றுடன் ஒன்று பிணைந்தவை அல்ல. உள்நாட்டு அரசியல் அவர்களின் வெளிவிகாரங்கள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடாது.

- "டெய்லி மிரர்" கட்டுரையிலிருந்து...

# லிபிய கலவரக்காரர்களுடன் கடாபி இரகசியப் பேச்சுவார்த்தை

## ரஷ்யத் தூதுவர் தகவல்



(திரிபோலி)

லிபியாவில் கலவரக்காரர்களுடன் அந்நாட்டு ஜனாதிபதி கடாபி இரகசியப் பேச்சுவார்த்தைகளில ஈடுபட்டு வருவதாக ரஷ்யத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் ஜனாதிபதி கடாபியின் 41 ஆண்டு கால ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. கடாபி பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. ஆனால் லிபியாவை விட்டு வெளியேற கடாபி மறுத்து வருகிறார். இதனால் போராட்டம் கடுமையாகியுள்ளது.

கலவரக்காரர்கள் தங்கள் பிடியில் உள்ள பெங்காசி நகரில் இருந்து நேட்டோ படைகளின் உதவியுடன் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்கள் மீது கடாபியின் இராணுவமும் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் இருதரப்பினருக்கும் இடையே கடும் போர் நடந்து வருகிறது.

எனவே போரை முடிவுக்குக் கொண்டுவர ஆபிரிக்க யூனியன நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

ஆபிரிக்க ஜனாதிபதி ஜுமா கடாபியைச் சந்தித்து சமரச பேச்சுவார்த்தை நடத்தினார். பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசியும் இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் ரஷ்யாவும் அதில் ஈடுபட்டுள்ளது. அதறகாக மிக்கைல் மார்கலோ என்பவரை சிறப்புத் தூதராக நியமித்துள்ளது. இந்த நிலையில் கடந்த வாரம் அவர் லிபியா வந்து அவரது மகனையும், பிரதமர் பாக்தாதி அல் மக்முதி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கடந்த வாரம் பெங்காசி சென்று கலவரக்காரர்களையும், பின்னர் பிரதமர் பாக்தாதி அல் முக்முதியையும் சந்தித்துப் பேசினேன். அப்போது கலவரக்காரர்களுடன் பிரானஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசி மூலம் மறைமுகமாக இரகசிய சமாதானப் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

லிபியாவில் நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தல் மூலம் அங்கு நடைபெறும் போராட்டத்துக்கு முடிவு ஏற்படும் என கடாபியின் மகன் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார். அதே நேரத்தில் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற கலவரக்காரர்களின் கோரிக்கையை கடாபி ஒரு போதும் ஏற்கமாட்டார் என பிரதமர் பாக்தாதி அல் முக்முதி கூறியதாகவும் ரஷயத் தூதுவர் மார்கலோவ் தெரிவித்தார்.

## ஐ.நா.செயலாளராக மீண்டும் பான் கீ மூன்

(நியூயோர்க்)



ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) பொதுச் செயலாளர் பான் கீ மூன் அப பதவியில் மேலும் 5 ஆண்டுகள் தொடரவார் என்பது உறுதியாகியுள்ளது.

15 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா.வின் பாதுகாப்புக் குழு நேற்றுமுன்தினம் அவருக்கு மீண்டும் ஐந்தாண்டு பதவிக்காலம் தருவதை ஆமோதித்து வாக்களித்தது. இதைத் தொடர்ந்து வரும் செவ்வாய்க்கிழமை (ஜுன் 21) 192 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா. பொதுக்குழு அவரை அந்தப் பதவியில் நீடிக்கச் செய்யும் விதமாக வாக்களிக்கும் என்பது உறுதியாகி உள்ளது. பாதுகாப்புக் குழுவின் ஒப்புதல் வாக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டதால், பொதுக்குழுவின் வாக்கு என்பது வெறும் சடங்கு மட்டுமே என்று கருதப்படுகிறது.

தென்கொரியாவைச் சேர்ந்த பான் கீ மூனுக்கு 67 வயதாகிறது. 2006ஆம் ஆண்டு ஐ.நா.வின் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்படுவதற்கு முன்பு தென்கொரியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்தார். ஐ.நா. பொதுச் செயலாளராக இவரது இரண்டாவது பதவிக்காலம் 2012ஆம் ஆண்டு தொடங்கும். 2016 வரை இப்பதவியில் இருப்பார்.

உலகச் செய்திகள்

# நுரையீரல் மாற்று சத்திர சிகிச்சை; இங்கிலாந்து மருத்துவர்கள் சாதனை

(லண்டன்)


உலகிலேயே முதன்முறையாக 20 வயதுடைய பெண்ணுக்கு நுரையீரல் மாற்று சத்திரசிகிச்சையை மேற்கொண்டு இங்கிலாந்து மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்தவர் பெக்கி ஜோன்ஸ். 20 வயது பெண்ணான இவர் கடுமையான மூச்சுத் திணறல் நோயினால் அவதிப்பட்டார். இவரைத் தெற்கு மான்லுஸ்டரில் உள்ள பல்கலைக் கழக வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் அவரது நுரையீரலில் பூஞ்சைக்காளான் நோய் பாதித்து இருப்பதை கண்டறிந்தனர்.

எனவே, நுரையீரலில் உள்ள பூஞ்சைக்காளானை அகற்ற மாத்திரைகளை வழங்கினர். ஆனால், அந்த நோய் குண ாக வில்லை. மாறாக அதிக அளவில பரவியது. முன்பைவிட மூச்சுத் திணறல் அதிகமானது.

எனவே நுரையீரல் மாற்று சத்திரசிகிச்சை நடத்த முடிவு செய்தனர். இதைத் தொடர்ந்து பெக்கி ஜோன்ஸ்சுக்கு நுரையீரல் மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக செய்து முடித்தனர். தற்போது அவர் எந்தவித பிரச்சினையும் இன்றி வழக்கமாக சுவாசிக்கிறார்.

இதற்கு முன்பு அமெரிக்காவில் 2 வயது சிறுவனுக்கு செயற்கை நுரையீரல் பொருத்தப்பட்டது. வொஷிங்டன் பல்கலைக் கழகத்தின் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இந்த அறுவை சிகிச்சையை நிகழ்த்தினர். அதுவே மிகப்பெரிய சாதனையாக கருதப்பட்டது. தற்போது உலகிலேயே முதல்முறையாக நுரையீரல் மாற்று சத்திரசிகிச்சை செய்து இங்கிலாந்து டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர்.



## நைஜீரியாவிற்கும் பரவியுள்ள தற்கொலைப் படைத் தாக்குதல்

(அபுஜா)

நைஜீரியாவில் முதல் முறையாகத் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 4 பேர் உயிரிழந்தனர். நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் நேற்றுமுன்தினம் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


அந்நாட்டின் பொலிஸ தலைமையகத்தில் நிகழ்த்தப்பட்ட இந்தத் தற்கொலைப்படைத் தாக்குதலில் படை அதிகாரி ஒருவர் இறந்தார்.

பொலிஸ் தலைவர் ஹபிஸ் ரிங்கிமைக்கை குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. டம்போவா என்ற இடத்தில் நிகழ்ந்த மற்றொரு குண்டுவெடிப்பில் 3 குழந்தைகள் இறந்ததாகக் பொலிஸ் அதிகாரி முகம்மட் அபுபக்கர் தெரிவித்தார்.

பொகோ ஹரம் என்ற முஸ்லிம் மத அடிப்படைவாத அமைப்பு இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. காயமடைந்தவர்களை மருத்துவமனையில் அனுமதித்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் 70இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன.

# மெய்தான் பாருங்கோ!

## வெம்பிப் பழுக்கும் பிஞ்சுகள்



ஒண்டு ரண்டு பிள்ளையளை வளர்க்கிறதும் அல்லாட்டி ஓராயிரம் பிள்ளையளைப் பள்ளிக் கூடத்திலை மேய்க்கிறதும் சிலபேருக்கு லேசுப்பட்ட காரியமாக இருக்கலாம் பாருங்கோ. ஆனா குழந்தையளை வளர்க்கிற பெற்றாரும் படிப்பிக்கிற வாத்திமாரும் குழந்தைகளுக்கான உளவியல் பாடத்தை முதல்ல படிச்சுத் தேறியிருக்க வேணுமெண்டு நான் இப்ப இதில சொல்லவாறன்.

அதாகப்பட்டது என்னவெண்டால், வயசுமுத்தின கிழடுகட்டையளாக இருந்தாலும் சரி, வேறை ஆராக இருந்தாலும் சரி எந்த இடமாக இருந்தாலும், பிஞ்சு மனங்களோடை பழகேக்கை, கதைக்கேக்கை அக்கம் பக்கத்தைப் பாராமல் வெட்கதுக்கத்தை விலக்கியெறிஞ்சுபோட்டு அந்தக் குழந்தைப் பிள்ளையளைப் போலவே மாறியிட வேணும் பாருங்கோ.

நான் இப்ப இதில ஏன் குழந்தைப் பிள்ளையளைப் பற்றிக் கதைக்க வாறன் எண்டால், சில அப்பன்-ஆத்தைமாருக்கு தங்கட அஞ்சும் பிஞ்சுமான குழந்தைகளின்ர மனசைப் புரிஞ்சு கொள்ளாமல் அதுகளுக்குப் போட்டு அடிஅடியெண்டு அடிக்கிறதால, அதுகள் பிஞ்சு வயசில உளத்தாக்கத்துக்குள்ளாகி கடைசியில நாட்டுக்கும் உதவாமல், வீட்டுக்கும் உதவாமல் நட்டநடு வீதியள்ள சாராயப் போத்தலோடையும், சிகரெட் துண்டுகளோடையும் தள்ளாடித் திரியத் தொடங்கியிடுங்கள்.

**“குழந்தைகளின் மனசு உலராத சீமெந்து தரைபோன்றது. அதில் என்ன பதியப்படுகிறதோ, அதுவே அவர்கள் வாழும் காலம் வரைக்கும் தொடரும்...”** எண்டு ஏதோ ஒரு பேப்பரில படிச்சது ஞாபகமாக் கிடக்குது எனக்கு.

சரி! நான் இப்ப விசயத்துக்கு வாறன். இப்ப கிட்டடியில கோப்பாய் பக்கம் ஒரு தெரிஞ்ச வீட்டை போயிருந்தனான் பாருங்கோ. நான் போன நேரம் சரியில்லை. எனக்கு இழவு வீட்டை போனதான மன உணர்வாப் போச்சுது.

றோட்டுப் படலையைத் திறந்து வீட்டு முத்தத்தில காலை வைச்சுக் கொண்டு நிமிர்ந்து பாத்தன். நான் கண்ட அந்தக் காட்சி...கடவுளே... கடவுளே...நானே தலையில அடிச்சுக் குளற வேணும் போல இருந்தது.

“ஆ...ஐயோ.... அப்பா அடிக்காதேங்கோ. நான் இனி ஊக்கமாய் படிக்கிறன். முதலாம் பிள்ளையாய் வாறன். ஆ...ஐயோ நோகுது... முதுகெல்லாம் எரியுது... அப்பா அடிக்காதேங்கோ...”

வலிதாங்காமல் கத்துற பொடியனுக்கு வயசு ஒரு பத்திருக்கும். பொடியனால இனி அடியும் தாங்கேலாது, அழுகையும் தாங்கேலாதெண்ட கட்டமாய்க் கிடக்க, எனக்கு மனம் பொறுக்கேலாமல் போச்சுது பாருங்கோ. விறுக்கெனக் கிட்டப்போய் பொடியன்ர தேப்பன்ர கையில கிடந்த பூவரசங் கம்பைப் பிடுங்கி எடுக்க, அப்பன்காரன் என்னைப் பார்த்து புலி உறுமினமாதிரி உறுமினான். அவன் உறுமின விதத்தைப் பார்க்க எனக்குப் பயம் வந்திட்டுது. ஏனெண்டாப் பாருங்கோ முந்தி அப்பிடியான ஆட்களோடைதான் அவன் திரிஞ்சவன். எண்டாலும் நான் விடேல்ல. வன்னியில அற நனைஞ்சு கூதலென்ன குளிரெண்ண வெண்டு இருக்கிற எனக்கு, உவற்ர உறுமல்பேச்சு என்ன பண்ணப் போகுது...? எண்டு நினைச்சுக் கொண்டு தடியைப் பறிச்சு எறிஞ்சு போட்டு என்ன பிரச்சினையெண்டு கேட்டன். அதுக்கு அவன் சொன்ன பதில்..? கடவுளே! இப்பிடியும் ஒரு கொடுமையள் நடக்குதே இஞ்சை.

அதென்னண்டாப் பாருங்கோ. அந்தச் சின்னப் பொடியன் நேசறி வகுப்பிலயிருந்து ஆண்டு அஞ்சு வரைக்கும் ஊக்கமாகப் படிச்சிருக்கு. பொடியன் படிக்கக் கூடியவன் எண்டு அப்பனும், ஆத்தாவும் பொடியனில கொஞ்சம் ஊக்கமாத்தான் இருந்திருக்கினம். புலமைப் பரிசில் சோதனையில அந்தச் சின்னன் முதலாவது இடமா வந்ததில எல்லாருக்கும் நல்ல புளுகம்தான். பள்ளிக்கூட வாத்திமாரோடை நிண்டு படமும் எடுத்து பேப்பரில போட்டு வந்ததும் இருக்கு.

பொடியன் புலமைப்பரிசில பாஸ் எண்டவுடன அப்பன்காரன் இனியென்ன பிள்ளை தானாப் படிக்கும்தானே... எண்ட எண்ணத்தில கடை வியாபாரத்தோடை சிவத்தொண்டு, பொதுத்தொண்டு, சில்லறைத் தொண்டுகளெண்டு ஊர் முழுக்கச் செய்ய வெளிக்கிட்டிட்டார். அம்மாக்காரி சமைக்கிறநேரம் போக, மீதி நேரமெல்லாம் ரி.வியில வாற மெகா தொடருகளைப் பார்த்து அதில அழுகிறவையளோடை சேர்ந்து அழுது, சிரிக்கிறவையளோடை சிரிச்சுக் கொண்டு பொழுதைப் போக்காட்டத் தொடங்கியிட்டாள்.

அப்பனும், ஆத்தாவும் ஆளுக்கொரு பக்கமாத் திரும்பிப்போக, அந்தப் பொடியனைப் படிப்பில ஊக்கப்படுத்துறதுக்கு ஒருத்தருமில்லாமல் போச்சுது. பொடியனுக்கும் சின்ன வயசு. விளையாட்டுப் புத்தி. படிப்பில கவனத்தைச் செலுத்தேல்லை. அஞ்சாம் ஆண்டு போய் இப்ப ஆறாம் ஆண்டு முதலாந்தவணைச் சோதனையில ஐம்பத்திரண்டு பிள்ளையளுக்கை பொடியன் பதினேழாவது பிள்ளையா வந்திட்டான்.

பொடியன்ர இந்த நிலைக்கு ஆர் பொறுப்பு? பொடியனா? இல்லை அவனைப் பெத்ததுகளா? நல்லாச் சிந்திச்சுப் பாருங்கோவன் ஒருக்கா.

பிள்ளையள் புலமைப்பரிசில பாஸ் எண்டவுடன சுனாமி அடிச்சு ஓய்ஞ்ச மாதிரி தாய், தேப்பன்மாரும் ஓய்ஞ்சு போயிடுவினம். பிறகு பிள்ளையளை நரபலி எடுக்க வெளிக்கிடுவினம் பாருங்கோ. இதுதான் நான் போன வீட்டிலும் நடந்தது. இப்பிடி இன்னும் எத்தனை எத்தனை இடங்களில எத்தனை பிள்ளையளின்ர பிஞ்சு மனங்கள் நோகடிக்கப் படுகுதோ ஆர் கண்டது?

எனக்கு அந்த இடத்தில நிற்கப் பிடிக்கேல்லை. பிறகொரு நாளைக்கு வாறன்... எண்டு சொல்லிப்போட்டு திரும்பி வீட்டு விறாந்தையைப் பாத்தன்.

பூவரசங் கம்பால அடிச்ச இடம் தடிச்சுப் போயிருக்க வேணும் போலக்கிடக்குது. அந்தச் சின்னப் பிஞ்சு தன்ர வாயில எச்சில் தொட்டுத் தடவிக்கொண்டிருக்கிறதைப் பாத்ததும் எனக்கு அழுது குளற வேணும் போலக் கிடந்தது பாருங்கோ.

-சின்னக்குட்டி சின்னச்சாமி.

# இலங்கைத் தமிழர்மீது அக்கறை கொள்ளும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு வேண்டுகோள்



நான் தமிழ்நாட்டிற்குச் சென்றிருக்கிறேன். பிரதான அரசியல்வாதிகள் தமது அரசியல் ஈழத் தமிழர் குறித்துப் பேசியே தம்மை அரசியலில் நிலைநிறுத்திக் கொண்டுள்ளனர். நான் ஈழத் தமிழ் அகதிகள வாழும் முகாம்களுக்குச் சென்றிருக்கிறேன். அவர்கள் மிருகங்களைப் போல நடத்தப்படுகிறார்கள். சிறைக் கைதிகளைப் போல நடத்தப்படுகிறார்கள். பலர் அங்கேயே பிறந்து வளர்ந்து பெரியவர்களாகியிருக்கிறார்கள். அவர்கள் சுதந்திரமாக பதிவின்றி வெளியே சென்றுவர முடியாது. வேலை செய்யமுடியாது.

இதை எல்லாம் பார்த்துக். கொண்டு தமிழ் பிரதான அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள்? பலர் செய்வது போல, தமிழ் அடையாளம், தேசியம் என்பவற்றை உருவாக்கி அதனை மூலதனமாக்கிக் கொள்கிறார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே ஈழத்தமிழர்கள் மீது அக்கறை இருந்திருக்குமானால் அந்த அக்கறை முதலில் முகாம் களில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் மீதே செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இதை யாரும் புலி எதிர்ப்புப் பன்னாடை சொல்லவில்லை. லண்டனில் புலி ஆதரவு அமைப்புக்கள் ஒன்றிணைந்து அருந்ததி ராயை பேச அழைத்த போது அவர் கூறிய விடயங்கள்.

தமிழ் நாட்டிலே உங்களது முற்றத்திலே விலங்குகளாக நடத்தப்படும் உங்கள் 'தொப்புள் கொடி உறவுகள்' என்ன தவறு செய்தார்கள்? இன்று நேற்றல்ல கடந்த 25 வருடங்களாக தஞ்சம் தேடிச் சென்ற இடத்தில் சிறை வைக்கப்படிருக்கிறார்கள். நீங்கள் புல்லரித்துப் புளகாங்கிதமடையும் 'அன்னை ஜெயலலிதா'வின் தமிழுணர்வும், இதுவரை நீங்கள் தமிழர் தலைவனாக வேடம் கட்டியிருந்த 'இரத்தத்தின் இரத்தம்' கருணாநிதியும் காலாகாலமாக ஆண்டு மகிழ்ந்த மாநிலத்தில் தான் இந்த மனித அவலமும் நடக்கிறது.

இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது என்று மட்டும் சொல்லி விடாதீர்கள். உங்களோடு நீண்ட தொலைவிலிருக்கின்ற அருந்த திக்குத் தெரிகின்றதென்றால் 'விலங்குப் பண்ணையை' சுற்றிக் குறுக்கும் மறுக்குமாக நடந்து திரியும் உங்களுக்கு இதெல்லாம் அக்குவேறு ஆணி வேறாகத் தெரிந்திருக்கும்.

தேசியம், அடையாளம் என்பவற்றை நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்வதற்கான முதலீடாகப் பயன்படுத்திக் கொள்கிறீர்களா இல்லையா என்பது தான் இங்கு வினா. இதற்கு ஆயிரம் பேச்சுக்களில் நீங்கள் பதில் சொல்லலாம். நரம்பு புடைக்க உணர்ச்சிவயப்படும் சீமானைப் பார்த்திருக்கிறோம். சினிமாவில் வந்த வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு மறு அவதாரம் கொடுப்பது போல் பேசும் வை.கோபாலசாமியைக் கண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் முதிர்ந்த 'தேசியத் தலைவராகும்' நெடுமாறனைப் பார்த்திருக்கிறோம். ஈழப் பிரச்சினை, ரியல் எஸ்டேட் பிரச்சினை என்பவற்றோடு தலித் "பிளேவரையும்" கலந்து தேசிய உணர்விற்குச் சாம்பார் படைக்கும் தொல்.திருமாவளவனைக் கேட்டிருக்கிறோம்.

நீங்கள் 'விலங்குக் கூடங்கள்' குறித்து என்ன செய்யப் போகிறீர்கள். வழமை போலவே ஒளிந்திருக்கும் 'தேசியத் தலைவர் பிரபாகரன்' நாளை வந்து தமிழ் நாட்டின் அகதிகளையும் சேர்த்து விடுவிப்பார் என்றா சொல்லப் போகிறீர்கள்? இன்றைய திகதியில் பிரபாகரன் வருவார் என்று ஜெனீவாவில் வை.கோ அதிர்ந்ததையே கோமளித்தனமாகத் தான் புலம்பெயர் தமிழர்களே நோக்கினார்கள்.

அருந்ததிராயின் கூற்றைக் கண்டு அஞ்சிவிடாதிர்கள். அதனை சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். கருணாநிதி ஈழம் பெற்றுத்தருவார், அமெரிக்கா வரும், ஐரோப்பா கடைக் கண் திறக்கிறது என்று மக்களை நம்பவைத்தே நீங்கள் நன்றாக முதலிட்டிருக்கிறீர்கள். இப்போது ஜெயலலிதா பெற்றுத் தருவார் என்று இன்னொரு கதையைப் பரப்பியிருக்கிறீர்கள்.

இனிமேல் அதிகமாக மக்கள் உங்களை நம்பத் தயாரில்லை. இந்த நூற்றாண்டின் அறிவு சார் சமூகத்தில் தகவல்கள் காட்டுத் தீ வேகத்தில் பரவி விடுகின்றன. ஆயிரம் வியாபாரிகள் உங்கள் 'தேசிய' முதலீடுகளுக்கு ஆதரமாக நின்றாலும் எங்காவது, ஏதாவது ஒரு சந்தில் சமூகப் பற்றுள்ள குரல் ஒலிக்கும்.

ஆக, அருந்ததி ராய் கூறியதை சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று முதல் .சீமான், நெடுமாறன், வை.கோபாலசாமி, திருமா, தா.பாண்டியன் போன்ற இன்னோரன்ன தமிழினவாத அரசியல்வாதிகளுக்கு இது பகிரங்க வேண்டுகோள் மட்டுமல்ல சவாலும் கூட.

விலங்குக் கூடங்களில் சிறை வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்யப் போராடுங்கள்.

அவர்களின் சுதந்திர நடமாட்டத்தை உறுதி செய்யுங்கள்.

விரும்பியவர்களுக்குப் பிரஜா உரிமை பெற்றுக் கொடுக்க பரிந்துரை செய்யுங்கள், மறுத்தால் தெருவிலே போராடுங்கள்.

அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை முன்வையுங்கள்.

இந்தியாவில் பிறந்து ஈழப் போராட்டத்தின் வரலாற்றோடு வளர்ந்து பெரியவர்களாகியிருக்கும் விலங்குக் கூடங்களின் குழந்தைகளின் கல்வியை உறுதிசெய்யுங்கள்.

ஈழத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்புகின்றவர்களின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய அரசியல் போராட்டங்களை முன்னெடுங்கள்.

இந்த அவலங்களை உலக மக்களிடம் பிரசாரம் செய்யுங்கள்.

இதற்கெல்லாம் உங்கள் சொந்தப் பணத்தில் ஒரு பைசா கூடத் தர வேண்டாம். இப்போது தான் சடுதியாகத் தமிழ் உணர்வு மேலெழுந்து தேசியக் கூத்தாடும் அன்னை இருக்கிறாரே. அவர் பெரும் பண முதலைகளிடம் பெட்டி வாங்கும் போது அகதிகளுக்கும் சேர்த்து வாங்கச் சொல்லுங்கள். அப்படி வாங்கா விட்டால் அம்பலப்படுத்துங்கள்.

தமிழ் அடையாளக் கனவில் மூழ்கிய நேரம் போக மிகுதியானவற்றில், சிறைவைக்கப்படிருக்கும் அகதிகளிடம் பேசிப் பார்த்தாலே இன்னும் கோரிக்கைகளைக் கண்டறியலாம். இனிமேலும் பிரபாகரன் வருவார் என்பதை மட்டும் முன்வைத்து அரசியல் நாடகம் போடமுடியாது. நேர்மையாக மக்கள் பற்றிருந்தால் இந்த எரியும் பிரச்சினையை அதுவும் 25 வருடங்களாக தீப்பந்தம் போல எரியும் பிரச்சனையை முன்வைத்துப் போராடுங்கள். உங்கள் முற்றத்தில் நிகழும் அவலம் அல்லவா? பிரபாகரன் வந்தால் வரட்டும். அதுவரைக்கான இடைக் காலத்தில் நீங்கள் சாதித்ததாக இவை அமையட்டுமே?

- *அஜித்*

"இனியொரு" கட்டுரையிலிருந்து

# தமிழக சட்டசபைத் தீர்மானங்களும் இலங்கை - இந்திய உறவும்

இந்திய - இலங்கை உறவு தொடர்பில் தமிழ்நாடு சட்டசபைக்கு வந்த இரண்டு தீர்மானங்கள் செய்தியில் அடிபடுகின்றன. முதலமைச்சரான ஜெயலலிதா, இரண்டு தீர்மானங்களைக் கொண்டு வந்தார். யுத்தக் குற்றம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, மீள்குடியேற்றம் தொடர்பான தீர்மானம், சர்வதேச சமுதாயத்தின் தற்போதைய மனோநிலையை பிரதிபலிப்பதாக உள்ளது. சர்வதேச அபிப்பிராயத்தின் மீது இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்தோரின் அழுத்தத்தையும் காணமுடிகிறது. கச்சதீவு தொடர்பான தீர்மானம் கச்சதீவை மீளப்பெற வேண்டுமென இந்திய அரசாங்கத்தை கோரியது.

இரண்டு தீர்மானங்களும் இலங்கை, இந்திய உறவுடன் சம்பந்தப்பட்டவை. இந்தத் தீர்மானங்கள் தொடர்புடைய பிரச்சினைகளில் இரண்டு அரசாங்கங்களின் மீதும் அழுத்தங்களைக் கொடுக்கக் கூடியவை. அரசியல், அரசியல்வாதிகள், சர்வதேச சமுதாயம், புலம்பெயர்ந்தோர் என்பதற்கு அப்பால் இனப்பிரச்சினை, மீனவர்களின் உயிர், அவர்களின் வாழ்வாதாரம் என்பன தமிழ்நாட்டில் உடனடி தீர்வை வேண்டி நிற்பவையாகவும் நீண்ட கால கவனம் தேவையானவையாகவும் உள்ளன.

இலங்கையிலும் இரு நாடுகளுக்கும் பொதுவான கடற்பிரதேசத்திலும் சமாதானம் தேவையென தமிழ்நாடு கருதுகின்றது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இந்த அக்கறையே இரண்டு தீர்மானங்களினதும் அடிநாதமாக உள்ளது. இதற்கான பெருமையை ஜெயலலிதா கோரமுடியுமாயின், அவர் அதற்கு பின் நிற்கப்போவதில்லை.

இனப்பிரச்சினை மீதான தமிழ்நாடு சட்டசபையின் தீர்மானத்தின் அடிநாதமாக இலங்கையிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பும் முப்பது வருடகால இன மோதலின்போது வாக்களிக்கப்பட்ட அரசியல் தீர்வும் உள்ளது. உலகின் வேறு எந்தப் பகுதியிலும் காணப்படுவது போலவே தமிழ்நாடு சட்டசபை தீர்மானமும் யுத்தக் குற்றங்களையும் அரசியல் தீர்வையும் பிணைக்கின்றது. கொழும்பும் சென்னையும், சென்னையும் புதுடில்லியும் இந்தப் பிரச்சினைகளை வித்தியாசமாக காணக்கூடும். ஆனால் கவலைகள் யதார்த்தமானவை, பொதுவானவை.

1983 இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்து சேர்ந்த பின்னரே இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் அக்கறை முளைகொண்டது. அதற்கு முன் இந்தியா அக்கறைப்படவில்லை. இனப்பிரச்சினையில் இந்தியாவின் ஈடுபாடு இந்தியாவின் ஆதிக்கப்போக்கு, இந்தியாவின் சுயநலம் என்பவை சார்ந்தவை எனக் கருதுவது பிழையானது. அது தமிழ்நாட்டில் காணப்படும் கவலைகள், தமிழ்நாடு பற்றிய கவலைகள் ஆகியவற்றுடன் பிணைந்துள்ளது. கொழும்பு இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இலங்கையில் சில பகுதியினர், குறிப்பாக அதிகார மட்டத்தில் உள்ளவர்கள், மீனவர் பிரச்சினை தொடர்பில் இறைமை, ஆட்புல தொடர்ச்சி என்பவற்றை தூக்கிப் பிடித்துக் கொண்டுள்ளனர். சிலர் இந்த வகையில் இலங்கை கடற்படையின் தலையீட்டை நியாயப்படுத்தவும் செய்கின்றனர்.

அவர்கள் இந்த நடவடிக்கைகள் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய கடற்புலிகளின் பயமுறுத்தலை கட்டுப்படுத்துவதை நோக்கமாக கொண்டவை எனவும் கூறுகின்றனர். இந்த நியாயத்தை சரியெனக் கொண்டால் ஏனைய நியாயங்களையும் ஏற்க வேண்டும். இதில் தமிழ் நாட்டில் காணப்படும் கவலைகளும் அடக்கப்பட வேண்டும்.

கச்சதீவு பிரச்சினை தற்போது புதுடில்லியின் உயர்நீதிமன்றத்தின் முன் உள்ளது. தீர்ப்பு எப்படி இருப்பினும் இலங்கையினால் இதற்கு எதிராக ஒன்றும் கூறமுடியாது. இலங்கையின் உயர் நீதிமன்றம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருபக்க ஒப்பந்தம் பற்றி குறிப்பிடாமலே

(தொடர்ச்சி...12ஆம் பக்கம்)

# மாந்தை கிழக்கில் வாழ்வாதாரத் திட்டம் 'சோ ஆ' நிறுவனம் வழங்கியது உதவி




(யாழ்ப்பாணம்)

ZOA நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம், கரும்புள்ளியான் பாலைப்பாணி, பூவரசன்குளம், பாலிநகர் ஆகிய பிரதேசங்களில் மீள்குடியேறியவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 89 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களான நீர் இறைக்கும் இயந்திரம், மருந்து தெளிகருவி, நீர் வழங்கல் குழாய் (150 அடி) புட்வால்ப் என்பனவும் 2 பேருக்கு சிறுதொழில் வியாபாரத்திற்கான பொருட்களும் வழங்கப்பட்டது.

மொத்தம் 91 பயனாளிகளுக்கு சுமார் 45 இலட்சம் பெறுமதியான பொருட்கள் ZOA நிறுவனத்தினால் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஜெயகாந் தலைமை தாங்கினார்.

அத்துடன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஜோன்பிள்ளை, அபிவிருத்தி உதவியாளர் சுதன் மற்றும் ZOA நிறுவனத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜே.யூட்வோல்டன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# சுகாதாரப் பணியாளருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)


யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு சார்ந்த பணியாளர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கக் கூடிய அடிப்படைத் தகமைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்காலத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் பொழுது பணியாளர்களது வரவு நிலையினையும் சேவைத் தரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு நியாயமான முறையில் நியமனங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, ஐக்கிய தொழிலாளர் சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செங்குந்தா சந்தைக்கு புதிய கட்டிடம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் கீழான செங்குந்தா சந்தைக் கட்டிடத் தொகுதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களால் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் உட்பட சபையின் உறுப்பினர்கள் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் அவர்கள் சந்தை நடவடிக்கையினையும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் இலக்கிய விழா கிழக்கில் நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

கிழக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆண்டு தோறும் நடாத்தி வரும் கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு நகரில் நடாத்தப்படவிருக்கின்றது.

மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சி.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாகாணப் பண்பாட்டுத் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

விழா நடத்துவற்குரிய இடங்களாக மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சர் விருது மற்றும் 2010ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இலக்கிய நூல்களில் சிறந்தவைக்கு இலக்கிய நூற்பரிசு வழங்கல் ஆகியனவும் விழாவில் இடம்பெறும்.

## சிசுவின் சடலம் தொலைபேசிப் பெட்டியில்

(கொழும்பு)

பிறந்து ஒரே நாளான குழந்தை ஒன்று பொதுத் தொலைபேசிப் பெட்டியில் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ள சம்பவமொன்று கடவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் போடப்பட்டிருந்த இக்குழந்தை கடந்த 15 ஆம் திகதி போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். குறித்த குழந்தையை தொலைபேசிப் பெட்டியில் இட்டுச சென்றவர்கள் தொடர்பில் பொலிஸார் பொது மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தீயில் கருகி...

கிளிநொச்சிப் பொலிஸார் கூறினர். இவரது சடலம் யாழ். போதனா வைத்திய சாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அல்லைப்பிட்டியில்...

எதிரான அமைப்பு, கடற்தொழில் திணைக்களம், விவசாயத் திணைக்களம், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு, வேலணை பிரதேச சபை ஆகிய நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளன.

மேற்படி நடமாடும் சேவையில் குறித்த நிறுவனங்களூடாக தமது பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான யாழ். பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். (27)

## அளவெட்டி....

நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இச்சம்பவம் நடைபெற்ற சமயம் தான் கொழும்பில் இருந்ததாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தொலைபேசியூடாக தனக்கு நடந்தவற்றை கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு தொடர்பாக தாம் வருந்துவதாகவும், இனிவரும் காலங்களில் இவ்விதமான சம்பவம் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்த அவர், இலங்கை ஒரு ஜனநாயக நாடு, எவரும் அரசியல் செய்யலாம் அதற்கு இராணுவம் தடையாக இருக்காது என்றார்.

## கிளிநொச்சியில்...

தத்தமது போர் நடவடிக்கையின் போது பெருமளவான வெடி பொருட்களை பாவித்து போரை முன்னெடுத்திருந்தனர்.

அவ்வாறு புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதில் இராணுவ வெடிகுண்டு செயலிழக்க வைக்கும் பிரிவும் மற்றும் பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தற்போது ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டபோது படுகாயமடைந்த மேற்படி நபர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சுவீடன் நாட்டு...

என்ற அமைப்பு ஹெல்ப் சிறிலங்கா என்ற நிறுவனத்தைத் தொடங்கியபோது, இவர் தானும் நிதியுதவியளிக்க விரும்பியுள்ளார்.

சுவீடனைச் சேர்ந்த குறித்த சிறுவன் ஒரிகமி என்ற ஜப்பானியக் கலையில் கைதேர்ந்து விளங்கினார்.

இந்த கலையின் மூலம், கடதாசியை மடித்து உருவங்கள் மற்றும் சிற்பங்கள் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் கிடைத்த வருமானத்தை இலங்கையில் வறிய மக்களின் நலனுக்காக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரால் தயாரிக்கப்பட்ட படைப்புகள் சிலவற்றை சுவீடனில் சில இடங்களில் கண்காட்சியாக வைத்தே குறித்த சிறுவன் நிதி சேகரித்துள்ளார்.

ஹெல்ப் சிறிலங்கா நிறுவனத்திற்கு நிதியுதவி வழங்கியவர்களில் மிகக் குறைந்த வயதுடையவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த சிறுவன் எதிர்வரும் நாட்களில் தனது குடும்பத்துடன் இலங்கைக்கு வருவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்த...

சமாதானப் படைகளுக்கு தாக்குதல் ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானங்களை வழங்க தான் முன்வந்ததை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை விமானப்படை, இது குறித்து ஐ.நாவின் பதிலை எதிர்பார்த்து காத்துள்ளதாக நேற்று தெரிவித்தது.

அதை செய்யமுடிந்தால் அது எமது நாட்டுக்கு மேலதிக வருமானத்தை வழங்குவதுடன் இவ்வான்கலங்களை செயற்பாட்டு நிலையில் வைத்திருப்பதற்கும் உதவும் என விமானப்படையின் குறூப் கப்டன் விஜேசூரிய கூறினார்.

உக்ரேனில் தயாரிக்கப்பட்ட எம்.ஐ 24 ஹெலிகொப்டர்கள் மற்றும் சீன தயாரிப்பான வை-12 விமானம் ஆகியவற்றை வழங்க விமானப்படை முன்வந்துள்ளதாக கூறிய அவர் இது எமது விமானிகளுக்கும் சிறந்த வாய்ப்பாக அமையும் எனக் கூறியுள்ளார்.

## சனல் - 4 போர்க்குற்ற...


சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார்.

சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் லண்டனில் இயங்கும் நிறுவனம் என்பதால் அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சில இராஜதந்திர நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

## தென்பகுதி...


சம்பவத்தின்போது எம்.ஜி 2354 இலக்க சூட்டி பப் மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த நபர் மாலையாகியும் திரும்பாததை அடுத்து ஹோட்டல் உரிமையாளர் வங்கியுடன் தொடர்புகொண்ட போது வங்கியில் பணம் வைப்புச் செய்யப்படாததை அறிந்து கொண்டு இளைஞனை எங்கு தேடியும் கிடைக்காததைத் தொடர்ந்து இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த இளைஞனைத் தேடும் பணயில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன், குறித்த இளைஞன் தொடர்பாக தகவல் மற்றும் எம்.ஜி 2354 நாவல் கலர் மோட்டார் சைக்கிள் பற்றிய தகவல் தெரிந்தோர் யாழ் பீச் ஹோட்டலுடன் தொடர்பு கொள்ளுமாறு (0776529649) ஹோட்டல் உரிமையாளர் கே.நகுலேஸ்வரன் .தெரிவித்தார்.



# கடற்கரையில் உல்லாசம் மீனவர்கள் திண்டாட்டம்

## கசூரினா கடற்கரை தினசரி விழாக்கோலம்



(யாழ்.நிருபர்)

காரைநகர் கசூரினா பீச்சுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளால் தமது தொழிலுக்குப் பங்கம் ஏற்படுவதாக இங்கு கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கசூரினா சுற்றுலா மையத்தில் இருந்து அரைக் கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் அமைந்துள்ள மீனவர்களின் வாடி வீடுகளுக்குள்ளும், கொட்டில்களுக்குள்ளும் அத்துமீறிப் பிரவேசிக்கும் இளைஞர்களும், யுவதிகளும் தமது 'பாலியல் லீலைகளைப்" புரிவதற்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதாகக் கூறப்படுகிறது.

தமது கொட்டில்களுக்குள் அனுமதியின்றி நுழைய வேண்டாமெனக் கூறினால் மது போதையில் வரும் 'காடையர் கும்பல்'' தமது வள்ளங்கள் வலைகளுக்குச் சேதம் விளைவித்து மீன்பிடி உபகரணங்களை அடித்து நொறுக்க முற்பட்டதாக மீனவர் தெரிவித்தனர்.

இதனால், தங்களில் ஒரு சிலர் தொழிலுக்குச் செல்லாது வாடி வீடுகளில் தங்கித் தமது வள்ளங்கள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கசூரினா சுற்றுலா மையத்துக்கு வருவோர் வீசும் கழிவுப் பொருட்கள், சோடாப் போத்தல்கள் மதுபானப் போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள், சிகரெட் அடிக்கட்டைகளால் தமது சுற்றாடல் அசுத்தமடைவதாகவும் மலசலகூடக் குழிகளில் நிரம்பி வழியும் கழிவு நீரால் தமது கடற்தொழில் பிரதேசம் மாசடைவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த வருடம் இலங்கை உல்லாச பயணத்துறையை ஊக்குவிக்கும் முகமாக காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலா மையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல மில்லியன் ரூபா செலவில் நவீன கொங்கிறீற் வீதிகள் அமைக்கப்பட்டு மெரு கூட்டப் பட்டதைத் தொடர்ந்து உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பெருந்தொகையினர் இங்கு வருகை தருகின்றனர்.

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இங்கு வந்து செல்கின்றன. இங்கு வரும் ஒரு பேருந்துக்கு 200 ரூபா வீதம் வாகனத் தரிப்பிட வரியினை காரைநகர் பிரதேசசபை அறவிட்டு வருகின்றது.

எல்லா வாகனங்களுக்கும் வாகனங்களின் தரத்துக்கு ஏற்ப வரி அறவிடு இடம்பெறுகிறது. வரி அறவிடுவதில் கவனம் செலுத்தும் பிரதேசசபை சுற்றுலா மையத்தை எல்லைப்படுத்தி சுற்றுலாப் பயணிகள் ஏனைய பகுதிக்குள் பிரவேசிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இங்குள்ள மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

# ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு நவீன மருத்துவ உபகரணங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு யு.என். எவ். பி.ஏ நிறுவனத்தால் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி அருணா புண்ணிய மூர்த்தி அவர்களிடம் மேற்படி நிறுவனத்தினால் இவ் மருந்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. கர்ப்பிணிகளை பரிசோதிப்பதற்கான ஸ்கானர் இயந்திரம், சிறுநீரக கோளாறுகளை ஸ்கான் மூலம் கண்டறியும் இயந்திரம், குருதி அணுக்களின் எண்ணிக்கையைக் கண்டறியும் இயந்திரம் மற்றும் குறைப்பிரசவத்தில் பிறக்கின்ற குழந்தைகளைப் பராமரிக்கும் இயந்திரம் என்பன கையளிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஊர்காவற்றுறை பிரதேச நோயாளர்கள் மேற்குறித்த பரிசோதனைகளுக்கும், தேவைகளுக்கும் யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவரும் சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், இவ் இயந்திரங்கள் மூலம் குறித்த பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட இருப்பதாக ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (14)

# வாரிவளவு வீதிக்கு ஊரிமணல் இல்லையா?

## பொதுமக்களுக்கு தினசரி துன்பம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் வாரிவளவு பிரதான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது. இதனால், தனியார் பேருந்துகள் வாரிவளவுடன் தமது சேவையை நிறுத்திக் கொள்வதால் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் அரச ஊழியர்கள் தமது அலுவலகங்களுக்கு வாரிவளவில் இருந்து கால்நடையாகவே செல்ல வேண்டியுள்ளது.

இவ்வீதி திருத்தம் பற்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதிநிதி ஒருவரிடம் கேட்டபோது ஊரி மணல் பெற்றுக் கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையால் இவ்வீதித் திருத்த வேலைகள் நடைபெறவில்லை என்று கூறினார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி இந்நிதியை வழங்குவதாக உறுதியளித்தும் இதுவரை வீதி திருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# வாகரையில் வெடிகுண்டு விசாரணைகள் துரிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் தகவல் ஒன்றின் பேரில் நடாத்தப்பட்ட தேடுதலில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டு நேற்றுச் சனிக்கிழமை காலை செயலிழக்கச் செய்யப்பட்டதாக வாகரைப பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பிரதேசத்துக்குட்பட்ட கதிரவெளியில் உள்ள கல்குவாரி பகுதியில் குண்டு மறைத்துவைக்கப்பட்டுள்ளது தொடர்பில் தேசிய குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு வாகரை குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

150 கிலோ எடை கொண்ட இக்குண்டு பாரிய சேதத்தை விளைவிக்ககூடியது என தெரிவித்த பொலிஸார், விடுதலைப் புலிகளின் காலத்தில் இக்குண்டு இப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பிலான புலன் விசாரணை இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்க அரசு தவறியுள்ளது

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை அரசாங்கம் உரிய முறையில் பதிலளிக்கத் தவறியுள்ளதாக நியூயோர்க் லொக்க் ஐலண்ட் பௌத்த விகாரையின் விகாராதிபதி எத்தவாக சத்தஜீவ தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச சமூகத்தினால் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை ஊடகங்கள் போதியளவு பதிலளிப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் பின் லேடன் கொல்லப்பட்ட போது, மேற்குலக நாடுகள் பின் லேடனின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து பிரச்சாரம் செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடொன்றில் வாழ்ந்து வரும் தமக்கு இலங்கை ஊடகங்களின் பிரச்சார நடவடிக்கை போதியளவு மேற்கொள்ளப்படவில்லை என்றே தோன்றுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஊடகவியலாளர்கள் பொறுப்புணர்ச்சியுடன் சர்வதேச ரீதியில் பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பிரதி அமைச்சர் முரளிதரன் மீது போர்க்குற்ற விசாரணை வேண்டும்

## இது அல்ஜெசீராவின் கோரிக்கை

ALJAZEERA

பிரதியமைச்சர் முரளிதரன் மீது போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அல்ஜெசீரா தொலைக்காட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நீதிக்கான தமிழர் அமைப்பின் தலைவர் டொனால்ட் உடனான நேர்காணல் மற்றும் சனல்4 காணொளிகள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கி ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியொன்றின் போதே அல்ஜெசீரா தொலைக்காட்சி பிரஸ்தாப கோரிக்கையை முன்வைத்துள்ளது.

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மீது புலிகளுக்காக சிறுவர்களை கட்டாய ஆட்சேர்ப்பு மேற்கொண்டமைக்காக விசாரணை செய்ய வேண்டும் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே அவர் இலங்கையில் 600 பொலிஸாரை கொலை செய்த குற்றச்சாட்டில் பாரிய அழுத்ததை எதிர் நோக்கி வரும் நிலையில் அல்ஜெசீரா இவ்வாறானதோர் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

தற்போது கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆளும் அரசாங்கத்தில் பிரதி அமைச்சர் பதவியில் உள்ளார் எனப் புலிகளுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள அனைத்துக் குற்றச் சாட்டுக்களையும் விசாரணை செய்ய வேண்டும் எனவும் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அல்ஜசீரா மேலும் தெரிவிக்கின்றது.

புலிகள் இயக்கத்தின் எஞ்சிய முக்கிய பிரமுகர்கள் இன்று ஆளும் மகிந்த அரசாங்கத்தில் அமைச்சராகவும், முதலமைச்சராகவும் மற்றும் முக்கியஸ்தர்களாகவும் உள்ளனர் என்றும் குறித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி சுட்டிக் காட்டியுள்ளது.

# மாகாணசபைகள் சட்டத்தை அப்பட்டமாக மீறுகிறது அரசு

## மாகாண சபைகள் சம்மேளனம் குற்றச்சாட்டு

மாகாண சபைகளுக்கான சிறப்புச் சட்டங்களை மீறும் வகையில் அரசாங்கம் நடந்து கொள்வதாக மாகாண சபை உறுப்பினர்கள் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்களில் அரசாங்கம் தொடர்ச்சியாக தலையிட்டு வருவதாக மாகாண சபை உறுப்பினர்கள் சம்மேளனத்தின் செயலாளரும் மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருமான சஞ்சீவ கவிரத்தின சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் வரும் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவை அதிகாரிகள் ஆகிய அனைத்தும் தற்போது மத்திய அரசாங்கத்தினாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

மாகாண சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களிலும் மத்திய அரசாங்கத்தின் தலையீடு அதிகரித்து வருகின்றது.

அதுமட்டுமன்றி மாகாண சபைகளின் அதிகார வரம்பின் கீழ்வரும் மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் என்பவற் றிலும் அரசாங்கம் அடாவடியான முறையில் மூக்கை நுழைத்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றது என்றும் மாகாண சபை உறுப்பினர் சஞ்சீவ கவிரத்தின சுட்டிக் காட்டியுள்ளார்.

# மீண்டும் அதிகரிக்கிறது டெங்கு நோய்த் தாக்கம்

## 168 நாட்களில் 69 பேர் பலி

(கொழும்பு)

டெங்கு நோய் தொற்று காரணமாக கடந்த 168 நாட்களில் 69 பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களே அதிகளவில் பலியாகியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக அந்த மாவட்டத்தில் மாத்திரம் 24 பேர் பலியானதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

டெங்கு காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 8-மரணங்களும் கம்பஹா மாவட்டத்தில் 10 மரணங்களும் பதிவாகியுள்ளதாக அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதவிர யாழ்ப்பாணம், களுத்துறை, புத்தளம், குருநாகல், அநுராதபுரம் இரத்தினபுரி, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை டெங்கு நோயத் தொற்று காரணமாக 7 அயிரத்து 948 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜோர்தானில் பணிப்பெண் மரணம்

(கொழும்பு)

ஜோர்தானில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணியாற்றி வந்த நிலையில் மரணித்த டப்ளிவ். ஏ.டி.சீத்தா நிமாலியின் மரணம் சந்தேகத்திற்கிடமானது என அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது மகள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி மரணித்த நிலையில் தமக்கு கடந்த 14 ஆம் திகதியே தகவல் கிடைத்ததாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பணிப் பெண்ணின் பூதவுடலை நாட் டிற்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து எமது செய்திச் சேவை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் வினவியது.

அதற்கு பதிலளித்த சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர், டப்ளிவ்.ஏ. டி.சீத்தா நிமாலி என்ற பெண்ணின் பூதவுடலை மிக துரிதமாக நாட்டிற்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.